
www.padippakam.com

# வைகறை

# VAIKARAI

வைகறை - வருடம் - 1 விடியல் - 3 தை - 1991



படிப்பகம்

www.padippakam.com


# T.K.VIDEO

இலண்டன் வாழ் தமிழ் சினிமா ரசிகப் பெருமக்களுக்கு,
தென்னகத்தில் வெளிவரும் படங்களை உடனுக்குடன் பெற்றுக்கொள்ள
இலண்டன் மாநகரில் நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்

## T.K. VIDEO

புதிய படங்கள், பழைய படங்கள், புதிய பழைய படங்களின்
ஒலி ஒளிகள் உட்பட நூற்றுக்கணக்கான படங்கள் கைவசம் உண்டு.

இலண்டன் மாநகர் தவிர்ந்த ஏனைய இடங்களின்
ரசிகர்களுக்கு அஞ்சல் மூலமும் அனுப்பப்படும்
என்பதை பெருமையுடன் தெரிவிக்கின்றோம்.

தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்.

## T.K.VIDEO

**PRIME BUILDING**
**2nd Floor,**
**118 Tooting High Street,**
**London SW17 0RR.**
**Tel: 081-672 2676**
**Mobile: 0831-529637**
**Fax: 081-672 2624**


படிப்பகம்

www.padippakam.com

# விளம்பரக் கட்டண விபரம்.

| | |
|---|---|
| முழுப்பக்கம் (Full Page) - முதல், கடைசி உட்பக்கங்கள் (Front or Back Inner Page) | £75 |
| அரைப்பக்கம் (Half) முதல், கடைசி உட்பக்கங்கள் | £40 |
| காற்பக்கம் (முதல், கடைசி உட்பக்கங்கள்) - | £25 |
| முழுப்பக்கம் (ஏனைய பக்கங்கள் | £50 |
| அரைப்பக்கம் (ஏனையபக்கங்கள்) | £30 |
| காற் பக்கம் (ஏனையபக்கங்கள்) | £20 |
| சிறியளவிலான பக்கம் (ஏனையபக்கங்கள் | £05 |

(வீடு வாடகைக்குவிடல், விற்பனை, திருமண அழைப்பிதழ், நன்றிநவிலல், வியாபார விளம்பரங்கள், மரண அறிவித்தல் போன்ற சகல விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்)

நூற்றொகுப்பு: வைகறை ஆசிரியர் குழு

வெளியீடு: வைகறை
தமிழ் வெளியீட்டு நிறுவகம்
த.பெ. இல: 674
இலண்டன் WC1N 3XX.

பதிப்பு: குளோபல் பிறிண்டர்ஸ்

விசேட நிருபர்: ஜோன்ஸ்

தொடர்புகளுக்கு:
VAIKARAI
BM BOX: 674
LONDON WC1N 3XX.
U.K.

## உள்ளே....


| | |
|---|---|
| குவைத்துக்கு ஓர் கடிதம் | 4 |
| வைகறையின் பேனாவிலிருந்து | 5 |
| சிறுவர் பகுதி | 7 |
| கொம்பியூட்டர் மாப்பிள்ளை | 8 |
| உறுதி உள்ளவனென்றால் | 9 |
| சிறுகதை - ஈரமில்லாத இரவுகள் | 10 |
| சட்டம் வைத்தியருக்கு கொல்லும் அதிகாரம்.... | 13 |
| நீ விட்டுப்போன பாதையில் நாம் பட்டுப்போன... | 15 |
| எமன் அனுப்பினான் என்னை... | 16 |
| தங்காலைச் சிறையுடைப்பு | 17 |
| குறுக்கெழுத்துப் போட்டி | 19 |
| கடந்தகால நிகழ்வுகள் | 20 |


படிப்பகம்

# குவைத்துக்கு ஓர் கடிதம்

05|01|91

குவைத் மக்களே!

உங்களின் அவல நிலை கண்டு உலக நாடுகள் அழுகின்றன, ஆத்திரப்படுகின்றன. உங்கள் நாட்டின் ஜனநாயகம் அழியக் கூடாதென்றும், சர்வதேசச் சட்டம் பேணிப் பாதுகாக்கப் படவேண்டும் என்றும், பூரண இறைமையை மீட்டுத்தர வேண்டுமென்றும் ஈராக்கின் ஆக்கிரமிப்புக்கு எதிராக அமெரிக்காவும், பிரித்தானியாவும் போரிடத் துடிக்கிறார்கள். உங்களில் அதிக அக்கறை காட்டும் இவர்களின் சொந்த வரலாற்றை நீங்கள் ஏன் புரட்டிப் பார்க்கக் கூடாது?

'சர்வதேசச் சட்டம்' இது நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற பிணக்குகளை தீர்த்து வைக்கவென்றும், நாடுகளுக்கு இது தொடர்பாக உள்ள உரிமைகளை வரையறுத்துச் சொல்லவெனவும் ஆக்கப்பட்ட ஒரு விரிவான சட்டம். இப்படி ஒரு சட்டம் இல்லை என்றால் நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற பிரச்சனைகளை தீர்த்து வைப்பதென்பது மிகச் சிக்கலான விஷயமாகத்தான் இருந்திருக்கும். ஆனாலும் இச்சட்டமானது இப்படிப்பட்ட பிணக்குகள் வந்த போதெல்லாம் சரியான முறையில் பயன் படுத்தப்பட்டிருக்கிறதா? என்பது கேள்விக்குரியதுதான்.

உங்கள் நாட்டை ஈராக் பலாத்கார ஆக்கிரமிப்புச் செய்து தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்திருப்பது யாரும் அறிந்ததே. இது சர்வதேசச் சட்டத்திற்கு முரணானது என்பதை எந்தக் குழந்தை கூட வாய் திறந்து சொல்லும். இதைச் சொல்ல அமெரிக்காவும், பிரித்தானியாவும் தேவை இல்லையே. இந்த இரண்டு நாடுகளும் சர்வதேசச் சட்டம் செத்துப் போகக் கூடாது என்பதில் மிக அக்கறையாகவும், முழு மூச்சாகவும் நிற்பது வரவேற்கத் தக்கதுதான். ஆனாலும் ஒரு பெரிய சந்தேகம். இவர்கள் தங்களிடமுள்ள ஆயுதப் பலத்தையும் ஐரோப்பிய நாடுகளின் ஆதரவையும், அவ்வப்போது தலையாட்டுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடனும் சில சந்தர்ப்பங்களில் இச்சட்டத்தை உதாசீனப் படுத்தி விடுகிறார்களே. அது ஏன்?

உலகில் சமாதானமும் ஒழுங்கும் கலைந்து போகக் கூடாது என்பதில் வல்லரசு நாடுகள் அவதானமாக இருப்பது மெச்சத் தக்கதுதான். ஆனால் இதே வல்லரசு நாடுகள் சில நாடுகளின் பிரச்சனைகளை கண்டும் காணாமல், கேட்டும் கேளாமல் இருந்து விடுகிறார்களே அப்போது இந்த சர்வதேச சட்டத்தைப் பற்றி இவர்கள் பேசுவதில்லையே. பாலஸ்தீனியர்களின் எல்லைகளை நாளுக்கு நாள் இஸ்ரேலியர்கள் ஆக்கிரமிக்கிறார்கள். இது பற்றி இந்த நாடுகள் கடும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? தென் ஆபிரிக்காவில் சிறுபான்மையாகவுள்ள வெள்ளை இனத்தவர் பெரும்பான்மை கறுப்பினத்தவரை ஆளுகிறார்கள். இல்லை. நாளுக்கு நாள் கொல்லுகிறார்கள். இது மட்டும் இவர்களுக்குப் புரிவதில்லையோ? தென் ஆபிரிக்காவுக்கு எதிராகப் பொருளாதாரத் தடை போட வேண்டுமென்று உலக நாடுகள் எல்லாம் சொன்னபோது அதனைத் துணிச்சலோடு எதிர்த்த ஒரே ஒரு நாடு பிரித்தானியா, ஈராக்கிற்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்கச் சொல்லி ஏனைய நாடுகளிடம் மிகக் கண்டிப்பான குரலில் கோரிக்கை விடுவது பெரிய விந்தையாக இல்லையா? அப்படி என்ன உங்களில் தனித்துவமான அக்கறை இவர்களுக்கு. இன்னும் உங்களுக்குப் புரியவில்லையா? ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத கதைதான்.

இலங்கைப் பிரச்சனையில் இந்தியா தலையிட்ட போது இந்தியா செய்தது சரியென்றும் அண்டை நாட்டொன்றுக்குத்தான் பிரச்சனையில் தலையிடக் கூடிய அதிகாரம் உண்டென்றும் ஏற்றுக் கொண்ட அமெரிக்கா இன்று உங்களுக்கு விடுதலை தேடித்தர முன் வந்ததற்கு என்ன காரணமோ? உங்கள் பிரச்சனையைத் தீர்த்து வைக்க அக்கறையுள்ள அரபு நாடுகள் இல்லையோ? அத்தனையும் விஷயத்தோடுதான்.

வேறொருவரின் மண்ணில் தங்கள் துருப்புக்களை அனுப்பிக் கோடிக் கணக்கில் செலவு செய்து போர் நடாத்தத் துணிவதில் இவர்களின் நோக்கம் என்ன? சர்வதேசச் சட்டம் சாகக் கூடாது என்பதற்கல்ல. சமாதானமும் ஒழுங்கும் சீர் குலையக் கூடாது என்பதற்குமல்ல. தங்களின் சொந்தப் பொருளாதாரம் பாதிக்கப்படக் கூடாதென்பதும் தங்களின் ஆதிக்கத்தை உலகம் பூராக விரிவு படுத்த வேண்டும் என்பதும் தான். இவர்கள் தங்களின் குறிக்கோளை அடைவதற்கு உங்களைப் பலியாக்கப் போகிறார்களே.

என் ஆழ்ந்த அனுதாபங்கள்.

அன்புள்ள
அப்பு.

# வைகறையின் பேனாவிலிருந்து..........



இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து ஈழத்தில் அமைதி வரப் போகின்றது என்று கனாக்கண்ட எம்மக்களின் கற்பனைகள் கணப்பொழுதிலே கலைக்கப்பட்டு மீண்டும் ஓர் வேதனைக் காவியம்

தொடங்கியது ஆச்சரியம் தரும் ஓர் விடயமல்ல. காலாகாலமாய் திட்டமிட்ட குடியேற்றங்களினால் மட்டுமன்றி சட்டங்களினாலும் எம்மக்களை அழிவிலே ஆடவிடுவதையே குறிக்கோளாகக் கொண்ட ஸ்ரீலங்கா பேரினவாத அரசு இன்று மீண்டும் ஈழத்தின் பகுதிகளில் நடாத்தி வரும் தாக்குதல்கள், அழிவுகள், கொலை கொள்ளைகள், தர்பார்கள் ஒன்றும் இதன் நோக்கத்திலிருந்து முரண்பாடுடைய தன்மையைக் காட்டுவனவாகத் தெரியவில்லை.

இருப்பினும், இதுவரை காலமும் செய்யாத, நடக்காத அநியாயங்கள், அட்டூளியங்கள் சமூகவிரோதச் செயல்கள் என எம்மண்ணிலே தாண்டவமாடும் இந்நடவடிக்கைகள் தமிழ் பேசும்மக்களை அழித்து முடிக்கும் பொருட்டு மேற் கொள்ளும் திட்டங்கள் என்பதையே வெளிக்காட்டுகின்றன என்பது உணரப்பட வேண்டியது அவசியமாகும்.

இந்த வரிசையிலே தனது முழுக் கவனத்தைக் கிழக்கு மாகாணத்தின் பக்கம் திசை திருப்பியிருக்கிறது ஐந்தறிவுள்ள இலங்கை அரசு. மட்டக்களப்பு, அம்பாறை , கல்முனைப் பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்களின் வீடுகள் யாவும் அல்லது தொண்ணூறு வீதமானவை தீயிடப்பட்டோ அன்றி குண்டுகள் வைத்துத் தகர்க் கப்பட்டோ தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. அது மட்டுமன்றி வியாபார நிலையங்கள், பொது ஸ்தாபனங்கள், சேவை நிலையங்கள், ஆலயங்கள் என்று இந்த நாசகாரப் படையின் இலக்குக்கு ஆளாகாத இடமே இப்பகுதிகளில் இல்லை எனலாம்.

இவையாவும் வெறும் விடுதலைப் போராளிகளைப் பிடிக்கிறேன் என்று நடாத்தும் நடவடிக்கைகளா இல்லை இதன் பின்னணியிலே ஏதாவது காரணங்கள் இருக் கின்றனவா என்பதை நாம் காலத்துக்குக் காலம் அலசி ஆராயாவிட்டால் இலங்கை அரசின் கபட நாடகத்தை ரசித்த அப்பாவிப் பார்வையாளர்களாகி விடுவோம் என்பதில் ஐயமில்லை.

ஒரு இனத்தை அதன் பாரம்பரிய தேசங்களிலிருந்து அகற்றி அங்கு ஒரு புதிய சூழலை உருவாக்க வேண்டுமாயின், அப்பகுதிகளில் சிறிது சிறிதாக குடியேற்றங்களை மேற்கொள்ளுதல், கலவரங்களை உண்டுபண்ணி அதனைச் சாட்டாக வைத்துக் கொண்டு அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவித்தல், உணவு, உடை, சுகாதாரம் ,கல்வி, உறையுள், என்று கூறப்படுகின்ற ஐந்து அத்தியாவசிய மக்களின் பொருளாதாரத் தேவைகளை அப்பகுதி மக்கள் கிடைக்கப் பெறாவண்ணம் தடைகளை மேற்கொள்ளல், சமூக விரோத செயல்களைத் தூண்டி விட்டு தர்பார்களை நடாத்தி மக்களைப் பயம் கொள்ள வைத்து அப்பயத்தின் நிமித்தமும், அன்றாட தேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியாது என்ற நிலையின் காரணமாகவும் வேறு இடங்களுக்கு அகதிகளாகப் போகச் செய்தல் போன்ற நடவடிக்கைகளை ஒரு அரசு திட்டமிட்டுச் செய்யும்.

மேற்சொன்ன தகவல்களை வைத்துக் கொண்டு இன்று கிழக்கு மாகாணத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் சிக்கல்களை ஆராய்வோமானால் எங்கள் பாரம்பரிய பிரதேசம் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் அபாயத்தை எங்கள் எல்லோராலும் கண்கொண்டு நோக்கக் கூடியதாய் இருக்கும்.

அம்பாறை மற்றும் மட்டக்களப்பின் கரையோரப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிறிய சிறிய குடியேற்றங்கள் நாம் அப்பகுதியினை முற்றாக இழக்கும் சூழ்நிலையை அடைந்துவிட்டோம் என்பதையே எடுத்துக் காட்டுகின்றன.

அதுமட்டுமன்றி இந்த அரசு இன்று கிழக்குமாகாணத்தில்மேற்கொள்ளும் செயல்கள் அதன்நிமித்தம் அல்லலுறும் எம்மக்களின் துயரநிலை வெளியுலகிற்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டியது கட்டாயமாகும்.

முஸ்லிம் தமிழ் மக்களை மோதவிட்டு தனக்கே உரிய பாணியில் கொலைவெறி நாடகத்தை ஒத்திகை பார்க்கும் ஸ்ரீலங்கா கொடூர அரசு இன்று வரை இப்பகுதி மக்களுக்கு தாங்கொனாத்துயரங்களை விளைவித்திருக்கின்றது. இயக்கங்களுக்கிடையேயான கருத்து முரண்பாடுகளையும் நடைமுறைச் சிக்கல்களையும் சார்பாகப் பயன்படுத்திக் கொண்டு அரச சார்பான ஒருசில முஸ்லிம் இளைஞர்களின் செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டும் தமிழ் பேசும் மக்களின் பிரதேசத்தை முற்றுகையிட்டிருக்கும் இவ்வரசின் கூலிப்பட்டாளங்கள் செய்யும் அட்டகாசங்கள், அடாவடித்தனங்கள் பல்லாயிரக்கணக்கான மக்களை தத்தமது இல்லங்களை விட்டு வெளியேறி அகதி முகாம்களில் தஞ்சமடைய வைத்துள்ளது. மட்டக்களப்பில் சில கிராமங்களில் ஒரு தமிழ் பேசும் குடிமகன் கூட இல்லாமல் வெளியேறும் அளவிற்கு அப்பகுதி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் அல்லது பயமுறுத்தப்பட்டுள்ளார்கள்.கிழக்கு மாகாணப் பல்கலைக்கழகம், கல்லூரிகள், ஆலயங்கள் போன்ற இடங்களிலே மக்கள் கூடித்தங்கள் உயிர்களைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையிலே இருக்கின்றார்கள். ஒரே மொழியினால், ஒரே தேசத்தினால் ஒன்றாகிப் போன இரண்டு இனங்கள் (முஸ்லிம்-தமிழ்) ஒருவரை ஒருவர் தாக்குவதும் கொலை செய்வதும் அன்றாட நிகழ்ச்சியாக மாறிப்போயிருக்கும் இந்த நிலைக்கு அரச

பயங்கரவாதிகளே காரணிகள் என்று எடுத்துரைக்க ஒருவராலும் முடியாதிருப்பது கவலைக்கிடமான விடயமே. ஆயிரமாயிரம் வருடங்களாக அந்நியோன்யமாக சகோதரசகோதரிகள்

போன்று வாழ்ந்து வந்த இப்பகுதி மக்கள் இன்று ஒருவரைஒருவர் விரோதிக்குமளவுக்கு மாறியிருப்பதற்கு வெறும் அரசாங்கம் மட்டும் ஒரு காரணி என்று கூறிவிட்டு குறட்டை விடுவது போதுமானதல்ல. அந்த விரிசலைத் தடுக்க, உண்மையான பிரச்சனைகளை மக்களுக்கு உரிய நேரத்தில் பொருத்தமான வழியில் இனங்காட்டத்தவறிய எமது அமைப்புக்களும் ஒரு காரணியாகவே கருதப்பட வேண்டும் . இவ்விரிசல் மனப்போக்கு இவ்விரு சமூகங்களிடமும் இருந்து பிரித்து எடுக்கப்பட வேண்டுமாயானால், எம்மக்களுக்காக போராடும் அமைப்புக்கள், மற்றும் பொது நலஸ்தாபனங்கள் இருசாராரிலும் இருந்து ஒரு பரஸ்பர நோக்கோடு முன்வரவேண்டியது மிகமிக அவசியமாகும் .

இது இவ்வாறிருக்க , அரசினால் மேற்கொள்ளப்படும் இன்னும் சில நடவடிக்கைகள் கிழக்கு மாகாணத்தை முற்றாக அழிப்பதையே முழுமூச்சாகக் கொண்டு செயல்படுகின்றன என்பதை எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக அண்மையில் மட்டக்களப்பில் வைத்து கைது செய்யப்பட்ட இருநூறு இளைஞர்கள் எந்த முகாம்களிலும் தடுத்து வைக்கப்படவில்லை. அப்படியாயின் அவர்களது நிலை என்ன? அதுமட்டுமல்ல மூவாயிரம் பேருக்கு மேல் அகதி முகாம்களில் வைத்தோ அன்றி அவர்களது இல்லங்களில் வைத்தோ கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

பத்து பேராவது இப்பகுதிகளில் கத்திகளினால் வெட்டிக் கொல்லப்படுகிறார்கள். ஆதரவற்றுக் காப்பாற்ற யாருமில்லாத நிலையிலே அகதி முகாம்களே தஞ்சமென்று புகுந்த கிழக்கு மாகாண மக்கள் படும் அல்லல்கள், துன்பங்கள் எண்ணிலடங்காதவை. உணவு போதியளவு வழங்கப்படுவதில்லை. சுகாதார வசதிகள் சரியாக அமைத்துக் கொடுக்காமையினால் வாந்திபேதி, சிரங்கு, கண்நோய் போன்ற தொற்று வியாதிகள் வயப்பட்டு பலர் முகாம்களுக்குள்ளேயே இறந்துள்ளனர். பால்பற்றாக் குறையினால் குழந்தைகள் பட்டினிச் சாவைத் தேடிக்கொள்கின்றனர்

இது இவ்வாறிருக்க விடுதலைப் போராளிகளை வேட்டையாடுகிறோம் என்று சாயத்தைப் பூசிக்கொண்டு அகதி முகாம்களைச் சுற்றி வளைத்துத் திட்டமிட்ட தாக்குதல்களைச் செய்கிறது இலங்கை அரசு. கடந்த சில வாரங்களாக அரசு கூலிப்படைகளும் அவர்களுடன் கூடிய ஊர்காவற்படை நாய்களும் சேர்ந்து அகதி முகாம்களில் புகுந்து இளம் பெண்களை பிடித்து வந்து மானபங்கப்படுத்தி, கெடுத்துவிட்டு சுட்டுக் கொல்வது ஒரு அன்றாட நிகழ்வாகிவிட்டது. பீதியுடனும், கவலையுடனும் வாழும் இப்பகுதி மக்கள் தங்கள் பெண் பிள்ளைகளை இக்கொடுமையில் இருந்து காப்பாற்ற எடுக்கும் பிரயத்தனங்கள் கண்ணீரை வரவழைக்கும் செயல்களாகும். அண்மையில் ஒரு முகாமினுள் புகுந்த காடையர்கள் இரண்டு இளம் பெண்களைப் பிடித்து வந்து முகாமினுள் வைத்துக் கெடுத்து விட்டு சுட்டுக் கொன்ற சம்பவம் இலங்கை அரசின் ஈவிரக்கமற்ற காடைத்தனத்தை படம் பிடித்துக் காட்டும் செயல் என்பதில் வியப்பில்லை. இவ்வாறு கெடுக்கப்பட்ட அந்த இரண்டு பெண்களுடைய மார்பகங்கள், பெண்குறிகள் போன்றவற்றில் நெருப்பினால் சுட்ட காயங்கள் இருந்தமையைக் காணும் போது அப்பெண்மணிகளை எப்படிச் சித்திரவதை செய்து கொண்டிருப்பார்கள் என்பது நாம் சொல்லித்

www.padippakam.com



தெரிய வேண்டியதில்லை. இச்சம்பவத்தை அடுத்து சில முகாம்களில் தஞ்சம் புகுந்த மக்கள் முகாம்களை விட்டுக் காடுகளில் ஓடி ஒளிந்து கொண்டுள்ளனர். ஒருநாள் இரண்டு நாள் பிரச்சனையாக இருந்தால் காடுகளே தஞ்சமென்று இருக்கலாம். ஆனால் இது தொடருமானால் இம்மக்களின் கதி என்னவாவது?

கொலைகள், கொள்ளைகள், பெண்மீதான பலாத்காரங்கள் என அழிவின் விளிம்பிலே நின்று நாட்களை எண்ணும் கிழக்கு மாகாண மக்களின் உயிருக்கு பாதுகாப்பு இல்லை. அவர்களது உடமைகளுக்கு உத்தரவாதம் இல்லை. இந்நிலையில் இயக்கங்கள், பொது நலஸ்தாபனங்கள் மட்டுமல்லாது அகதிகளாய் வெளிநாடுகளில் வாழும் நாமும் ஏதாவது செய்ய வேண்டியது எமது கடமையாகும். துண்டுப் பிரசுரங்கள் வெளியிடல், ஊர்வலங்களை ஒழுங்கு செய்தல், வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் மூலம் விளம்பரப்படுத்தல் வேறு உலக பொது நல ஸ்தாபனங்களை வற்புறுத்திக் கேட்டல் போன்ற பலதரப்பட்ட பயன்மிக்க செயல்களில் ஈடுபட்டு இலங்கை காட்டுமிராண்டி அரசை, இச்செயல்களைப் புரிவதிலிருந்து நிறுத்தச் செய்யாவிடில் கிழக்கு மாகாணம் சிங்களப் பிரதேசமாவதை எம்மால் தடுக்க முடியாது போய்விடும். அப்பகுதி மக்களின் பிரச்சனையை வெளிக்கொணர 'வைகறை' தனது பங்களிப்பை வழங்கும் எனவும் உறுதி கூறுகிறோம். ◆

# நீர்மூழ்கிக் கப்பல் என்பது என்ன?

தண்ணீருக்கு மேலே மிதந்தும் தண்ணீருக்கு கீழாகவும் செல்லும் கப்பலுக்கு பெயர் நீர்மூழ்கிக் கப்பலாகும்(sub marine) முதலில் கண்டு பிடிக்கப்பட்ட நீர் மூழ்கிக் கப்பலுக்கும் இப்போதுள்ள அணு சக்தி மூலம் (nuclered powered) செலுத்தப்படும் நீர்மூழ்கிக் கப்பல்களுக்கும் இடையில் மிகவும் பாரிய வித்தியாசமுண்டு. இவை சில வேளைகளில் நியூக்ஸ் (nukes) என்றும் கூறப்படுவதுண்டு.

எல்லா நீர்மூழ்கிக் கப்பல்களும் முக்கியமாக மூன்று கேள்விகளுக்கு பதில் காணுவதில் தான் அவற்றின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணுகின்றன.

* எவ்விதம் நீர்மூழ்கிக் கப்பல் தண்ணீருக்குள் மூழ்குகிறது?


* எவ்விதம் செலுத்தப்படுகிறது?

* எவ்விதம் தூய்மையான காற்றால் நீர்மூழ்கிக் கப்பல் தண்ணீருக்கு கீழிருக்கும் போது நிரப்பப்படுகிறது?

நீர்மூழ்கிக்கப்பல் தாழுவதற்கும் மிதப்பதற்கும் பல வழிகள் மூலம் விடைகண்டுள்ளனர். இரு சுவர்கள் அமைத்து இரு சுவர்களுக்குமிடையில் நீரை நிரப்புவதன் மூலம் கப்பலை மூழ்கச் செய்யவும் நீரை வெளியேற்றுவதன் மூலம் கப்பலை மிதக்கச் செய்யலாம். கப்பல் நீரினுள் மூழ்கிய பின்பு கப்பலினுள் இருக்கும் காற்று மிகவும் கவனமாக உபயோகப் படுத்தப் பட வேண்டும் மின்சாரசக்தி குறைந்து கொண்டு வரும் அதையும் மீளப் பெறவேண்டும் (re-charge) அதனால் காற்றோ மின்சாரமோ

முடிய முன்பு கப்பல் மேலே வர வேண்டும் ஆனால் அணுசக்தி மூலம் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களில் அணுசக்தி ஆலை மூலம் பாரிய அளவு சக்தி பிறப் பிக்கப்படுகிறது. இச்சக்தி நீர்மூழ்கிக் கப்பல்களுக்கு தேவையான மின்சாரம் உற்பத்தி செய்யவும் பிராணவாயுவை கடல் நீரிலிருந்து உற்பத்தி செய்து நீர்மூழ்கிக் கப்பலில்லுள்ளவர்களுக்கு கொடுக்கவும் உபயோகப் படுத்தப்படுகின்றது.

அணுசக்திக்கப்பலான Triton என்னும் நீர்மூழ்கிக்கப்பல் உலகை கடல் நீருக்குக் கீழாக சுற்றிவர 84 நாட்கள் எடுத்தபோதும் ஒருமுறை கூட நீருக்கு மேல் வரவில்லை. இன்றைய் நீர்மூழ்கிக் கப்பலுள் திரைப்படங்கள், வாசிகசாலைகள், நன்னீரில் குளிப்பதற்குரிய வசதிகள் , உடற்பயிற்சிக்கூடங்ள், நல்ல சாப்பாட்டு வசதிகள் என்பன உள்ளன. நீர்மூழ்கிக் கப்பலைப் பற்றிய கட்டுரை உங்களுக்கு பயனுள்ளதாக அமையும் என நம்புகிறோம். ●



சிறுவர் பகுதி



# கொம்பியூட்டர் மாப்பிள்ளை!

மாப்பிள்ளை தேவையா?
பெண்பிள்ளை தேவையா?
காதலில் தோல்வியா?
விவாகரத்து செய்து திருமணம் செய்யப் போகிறீர்களா?
அல்லது வயது வந்தும் திருமணம் ஆகவில்லையா?

கவலையை விடுங்கள்.

இதோ ஓர் அரிய சந்தர்ப்பம். இன்று புதிய கொம்பியூட்டர் கண்டுபிடிப்பு!

இதற்கு நீங்கள் பணம் செலவு செய்ய வேண்டியது இல்லை. இன்றே நாடுங்கள்........

உங்களில் கறை இருக்குமானால் அது உங்களைக் கரையில் தள்ளி விட்டுவிடும்.

எல்லோரும் ஜாக்கிரதை. இக்கொம்பியூட்டரில் 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரது பெயரும் பிறந்த ஆண்டு, மாதம், திகதி என்பன உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

நீங்கள் உங்கள் பெயர், ஆண்டு, மாதம், திகதியை கொம்பியூட்டருக்குக் கொடுத்தீர்களேயானால் அது உங்களுக்குரிய அதிட்டப் பெண்ணையோ அல்லது ஆணையோ தெரிவு செய்து கொடுக்கும்.

இக்கொம்பியூட்டர் ஒரு முறைக்கு மேல் உங்கள் விபரங்களை ஏற்றுக் கொள்ளாது.

ஒரு முறை மறுக்கப்பட்ட பதில் கிடைத்தால் அவர் நேரே வயோதிபர் மடத்திற்கோ அல்லது தேம்ஸ் நதிக்கரையில் ஒரு குடிசையை அமைப்பதுதான் நல்லது. பிள்ளையார் ஆற்றங்கரையில் தவம் செய்வதற்கு அன்று இருந்த குறைபாடான கொம்பியூட்டர் தான் காரணம்.


இச்சம்பவத்தை நீங்கள் நம்பவேண்டுமானால் மரக் கறிக்கடை பொன்னம்மாக்காவையும் கிளப்பம் கிழாக்கர் அண்ணையையும் கேட்டுப் பாருங்கோ.

உங்களுக்குத் தெரியுமா பல இலட்சக் கணக்கான திருமணங்களை இக்கொம்பியூட்டர் செய்து வைத்துள்ளது. கடந்தவாரம் விவாகாரத்து செய்த திருவுடையாரும், செந்தாமரையும் தங்களுடைய பெயர், ஆண்டு, மாதம், திகதிகளை கொடுத்த போது ஒன்றாகச் சேர்த்து வைத்துள்ளது. இதில் உள்ள மர்மம் என்னவென்றால் இருவரும் பழைய கணவன் மனைவி என்பது.

- அந்தி -

# உறுதி உள்ளவனென்றால்.....

மனச்சிறையிலே.........
மிதிலையை
மிதித்ததால்த்தானே
விழிச்- சொல்லுக்கு
நாணம் வந்து-ஒரு
வில்லுக்கும்
வீரம் வந்தது.....




காதல்
தெய்வீகமானது - என்பதை
தெரியப்படுத்தத்தானே....இரு
கால்கள்
கானகம் சென்று -ஒரு
காவியம் படைத்தது.

எந்தச் சிறையில் எது இருந்தாலென்ன?
உறுதி உள்ளவனென்றால்
கையில் உலகமும் உருளும்.
இராவணச் சிறையிலிருந்த
சீதையைப் பாருங்களேன்....

நடு நிசியில் - நான்
உன் நினைவுகளை
உடுத்திக் கொண்டு- வானவீதியில்
உலாவரப் போனேன்....

நிலாவைக் காணாததால்
கொஞ்சம் நிலைமாறி



கனவை - என்
கைகளுக்குள் அழைத்தேன்...

உன்
பட்டு முகம்- என்
பார்வைக்குப் பட்டபோது
கனாவின் உறைகளைக்
கழற்றிவிட்டு - என்
கண்களைத் திறந்தேன்... நீ
காணாத இடத்திற்குச்
சென்று விட்டதாக - நினைவு
விஞ்ஞானிகள்
கண்டு பிடித்து விட்டனர்.

உன்
அழகிய முகத்தில்
ஆசையை வைத்ததாகத்தான்
அவர்கள்
அலட்டித் திரிந்தார்கள்.

உண்மையில் - உன்
இழகிய இதயத்தில்
அன்பை வைத்ததால்த்தான்
நான்
அழுது கொண்டு திரிகிறேன்.

-தயா மயூரன்-

www.padippakam.com




கோயில் மணி ஒலியைக் கேட்க அங்கே இனி ஒரு புது யுகம் பிறக்க வேண்டும். கிளைகள் முறிந்து போன மரங்கள். குண்டுகளினால்த் துண்டாகிப் போன பனை, தென்னை, தருக்கள். ஈழத்தின் ஒவ்வொரு மூலையிலும் ஏதோ ஒரு அனர்த்தம். அழுது அழுது நீர் வற்றி வரண்டு போன விழிகள். அங்கே ஒரு விடிவு வரும் எனக் காத்துக் கிடக்கின்றன. காலை தொடங்கி மாலை வரை மண் கிடங்குகளிலேயே வாழ்க்கை என்றாகிப் போய்விட்ட இடங்களிலே ஒன்றுதான் திண்ணைவேலி. யாழ் நகரிலே பொலிவு கண்ட ஊர். இன்று பாலைவனத்துக்கு ஒப்பாக பாழடைந்து போய்க்கிடக்கும் காட்சி அந்த மண்ணிலே பிறந்து அந்த மண்வாதசனையுடன் ஒன்றிப் போன ஒவ்வொரு குடிமகனின் கண்களிலும் கண்ணீரைக் கொண்டுவரும் அளவிற்கு மாறிப் போயிருக்கிறது. வாழ் நாள் முழுக்க கஸ்டப்பட்டு வயிற்றைக் கட்டிச் சேர்த்த ஒவ்வொரு சதமும் அங்கே உடைந்து போன கட்டடங்கள், வீடுகளைக் கட்டியவர்களின் இதயத்தைத் தொட்டுப் பார்த்தால்த் தான் புரிந்து கொள்ள முடியும்.

வாழ்க்கையின் இலட்சியங்கள் மட்டுமல்ல அவர்களது வீடு, வாசல் அனைத்து சொத்துக்களுமே உடைத்து நாசமாக்கப் பட்டுவிட்டது. நேரம் காலம் பார்க்காமல் கண்ணடபடி குண்டுகளைப் பொழியும் இலங்கை இராணுவத்தின் அடாவடித்தனங்களில் இருந்து தம் உயிர்களைக் காப்பாற்ற அப்பகுதி மக்கள் படும் அவஸ்தை இவ்வுலகிலே எந்தவொரு குடிமகனும் அடைந்திருக்காத கோர வேதனை. என்றோ ஒருநாள் அங்கே அமைதி என்றொரு பேச்சு வரும். எங்கள் வாழ்க்கையில் நிம்மதி வரும் என்று விதியை நொந்து உயிரைக் காக்க ஊஞ்சலாடும் அப்பகுதி மக்கள் வெட்டிய பங்கர் கிட்டத்தட்ட எல்லோர் வீடுகளிலுமிருந்து சுமார் நூறு யார் தொலைவில் அமைக்கப்பட்டிருக்கிறது.

கெலி வருகிற சத்தம் கேட்டால்ப் போதும் அங்கே ஏதோ குண்டு மழை பொழியப் போகிறது என்பது அங்கிருக்கின்றவர்களுக்குப் புரிந்துவிடும். விட்டது விட்ட இடத்திலேயே இருக்க எல்லோரும் பங்கருக்குள் ஓடி ஒளிந்து விடுவார்கள். பங்கருக்குள் ஓடுவதும் பின் வெளியே வருவதும் வாழ்க்கையாகிப் போன திண்ணைவேலி மக்களின் வாழ்க்கையே ஒரு வரலாறு.

'தம்பி மோகன் கெலிச் சத்தம் கேட்குது. பெட்டையை மெதுவாகக் கூட்டிக் கொண்டுபங்கருக்கை ஓடு தம்பி' பக்கத்து வீட்டு ஆச்சியின் குரல் கேட்டு வெளியே ஓடி வந்தான் மோகன். மோகன் யாழ் நகரிலுள்ள வங்கி ஒன்றில் எழுதுனராக வேலை செய்பவன். இரண்டு வருடங்களின் முன்பு தான் பல்கலைக் கழகத்தில்க் காதலித்த வேணியைக் கல்யாணம்செய்து கொண்டான். அப்பகுதியில் சுமாராக வாழ்ந்து வரும் மோகனின் வாழ்க்கை மட்டும் அந்தப் பகுதி மக்களிலிருந்து வேறுபட்டு விட முடியுமா என்ன?

வேணி.......வேணி.....

என்னப்பா........நான் இங்கை குசினிக்குள்ளை நிக்கிறன். வேணி தன் கணவனின் அழைப்புக் குரல் கேட்டுப் பதில் அளித்தாள். வேணிகெலி வருகிறதாம் அம்மா. அதைவிட்டிட்டு ஓடியாங்கோ. பங்கருக்கை போவம். அவசர அவசரமாக அழைத்தான் மோகன்.

வேணி ஒன்பது மாதக் கர்ப்பிணி. இன்றோ நாளையோ என்றிருக்கும் அவளால் வேகமாக நடக்க முடியவில்லை. மோகன் நீங்கள் ஓடிப் போங்கோ. நான் பின்னாலை வர்றன். என்ன நடந்தாலும் பரவாயில்லை. நீங்கள் கொஞ்சம் கெதியாய் வரப் பாருங்கோ வேணி.அவள் கூறியதை காதிலே போட்டுக் கொள்ளாமல் அவளைத் துரிதமாக்கச் சொன்னான் மோகன்.

நான்கு, ஐந்து கெலி விமானங்கள் திண்ணைவேலியைச் சுற்றி வட்டமிட்டன. இன்று பாரிய தாக்குதல் நடைபெறப் போகின்றது என்பது புரிந்து விட்டது. சிறுவர்கள் முதல் வயோதிபர் வரை எல்லோரும் பங்கருக்குள் போய்ச் சேர்ந்து விட்டனர். ஒருவரை ஒருவர் காண முடியாத இருள். சாதி சமய பேதமின்றி சங்கமமாகிப் போன மக்கள் திரளின் சூடு அங்கு பங்கரையே வெடிக்க வைத்துவிடும் போலிருந்தது.

வெளியே விமானங்கள் குண்டுகள் பொழியத் தொடங்கி விட்டன. ஒவ்வொரு குண்டும் நிலத்திலே விழும் போது பங்கர் ஒரு முறை அதிர்ந்து விட்டுப் போகும். கட்டிடங்கள், வீடுகள், கடைகள் என்று உடைந்து போகும் சத்தம் கேட்கிறது. ஒருவரும் வெளியே வரவில்லை.

மணித்தியாலக் கணக்காய்க் குண்டு வீச்சுத் தொடர்கிறது. இன்று இரவும் தொடரும் போல இருக்கு. எல்லோரும் இண்டைக்கு பட்டினி தான். ஊர்ப் பெரியவர் ஒருவர் ஆதங்கத்துடன் கூறினார்.

"அம்மா எனக்குப் பசிக்குது" ஏதாவது சாப்பிடத் தா! ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தி சிணுங்கி அழுது கொண்டிருந்தாள். சிலர் எல்லாப் பிரச்சனைக்கும் நிவாரணம் தரும் நித்திரையில் மூழ்கிப் போய் இருந்தனர். சீலனும் சித்திராவும் தங்கள் காதல் நாடகத்தை நடாத்த இதுதான் தகுந்த இடம் என்பது போல ஒருவர் மற்றவருடைய கரத்தைப் பற்றியவாறு ஏதோ தமக்குள் முணு முணுத்துக் கொண்டிருந்தனர்.

குண்டுகள் பொழியும் ஒலி குறைந்து கொண்டே போனது. விமானங்கள் முகாமை நோக்கிச் சென்று கொண்டிருந்தன. மோகன் மெதுவாக வெளியே வந்து பார்த்தான்.

"கெலி எல்லாம் திரும்பிப் போட்டுது. ஆனால் நாங்கள் வீடுகளுக்குப் போக முடியாது. ஏனென்டால் கறண்ட்வயர் எல்லாம் அறுந்து போய்ச்சுப் போல கிடக்கு. ஒரே கும்மிருட்டாய்க் கிடக்கு." பேசி முடிப்பதற்குள் மீண்டும் கெலி திண்ணைவேலியை நோக்கி மின்னி மின்னி வருவதைக் கண்டான் மோகன்.

"ஒருவரும் வெளியில் வராதைங்கோ. கெலிகள் திரும்பி வருகுது. திரும்ப அடிக்கப் போறாங்கள் போல கிடக்கு." கத்திக் கொண்டே பங்கருக்குள் புகுந்து கொண்டான்.

இரண்டாவது தடவையாக விமானங்கள் குண்டுகளைப் பொழியத் தொடங்கின. வானமே இடிந்து விழுவது போல இருந்தது பெரிய குண்டுகள் வெடிக்கும் சத்தம்.

ம்.........அம்மா.......ஐயோ.......ஒரு பெண்ணின் குரல் அழுவது போலக் கேட்டது.

யாரோ அழுற மாதிரிக் கிடக்கு. அந்த "ரோச்"லைட்டைக் கொஞ்சம் எடுத்துப் பாருங்கோ.அது ஆரெண்டு. ஒரு மூலையில் அமர்ந்திருந்த பெண்ணின் குரல் வேண்டுகோள் விடுத்தது.

"மோகன்......மோகன்..........எனக்குப் பெயினாய் இருக்குது. எனக்குக் கொஞ்சம் "கெல்ப்" பண்ணுங்கோ........பிளீஸ்.........வயிற்று வலி அதிகமாக அதிகமாக வாய்விட்டழுதாள் வேணி. எல்லோர் கவனமும் வேணியின் பக்கம் திரும்புகிறது. வேணிக்கு ஒண்டுமில்லைத் தம்பி. பயப்பிட வேண்டாம் குழந்தை பிறக்கப் போகிறது. அது தான் இடுப்பு வலி. குழந்தை பிறக்கச் சரியாய்ப் போகும். நீ ஒன்றுக்கும் கவலைப் படாமல் இரு. பக்கத்து வீட்டு ஆச்சி மோகனுக்குக் கூறிக் கொண்டே ரோச் லைற்றை எடுத்துக் கொண்டு வேணியின் அருகே சென்றாள்.

மோகனுக்கு நெஞ்சு படபடத்தது. வெளியே போக முடியாது. விமானங்கள் குண்டு வீசிய வண்ணமே உள்ளன. ஆஸ்பத்திரிகள் இயங்காது விட்டு ஒரு வாரத்துக்கு மேலாகி விட்டது. அவனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை.

வேணி வேதனை தாங்க முடியாது அழுது கொண்டிருந்தாள். "முருகா...... தலைப்பிள்ளை தாய்க்கு ஒண்டும் நடக்காமல் காப்பாத்திப் போடு அப்பனே. பக்கத்து வீட்டு ஆச்சி முருகனை வேண்டிக் கொண்டே வேணியைத் தன் மடியிலே தலை வைத்து படுக்க வைத்தாள்.

வேணி கால் கைகளை மடிப்பதும் நீட்டுவதுமாக வேதனையில்த் துடித்துக் கொண்டிருந்தாள். மோகன் இருளிலே தெரியாமல் கண்ணீர்த் துளிகளை சாரத்தினால் துடைத்துக் கொண்டான்.

அவளுக்கு வரவர நோக் கூடிக்கொண்டே போனது. ஐயோ...... அம்மா..... என்னைக் கொஸ்பிட்டலுக்கு கொண்டு போங்கோ....... பிளீஸ்...... என்னாலை தாங்க முடியாமல் இருக்கு........... அம்மா......... உயிர் போகும் வேதனையில் துடித்த வேணி அலறி அழுதாள்.

அப்போது தான் மோகனுக்கு டொக்டர் சொன்னது ஞாபகத்திற்கு வந்தது. ஆம். வேணிக்கு சாதாரணமாக குழந்தை பிறக்காது. சத்திர சிகிச்சை மூலம் செய்ய வேண்டும். இல்லை

அப்படி மீறிப் பிறந்தால் தாய்க்கு ஆபத்து ஏற்படலாம் என்பதே அது. அது மட்டுமன்றி வேளைக்கே ஆஸ்பத்திரியில் வேணியைச் சேர்க்கும் படியும் டொக்டர் கூறியது மோகனின் இதயத்தை சுட்டு எரித்துக் கொண்டிருந்தது. அவன் தன்னை மீறி அழத் தொடங்கினான். ஆண்டவனே! எங்களை ஏன் தான் இந்த மண்ணிலே விட்டு வைத்தாய். எங்கள் வேதனை உன் கண்களுக்குத் தெரியவில்லையா? முருகா என் வேணியை எப்படியாவது காப்பாற்று. எனக்கு என்ரை பிள்ளை உயிரோட இல்லா விட்டாலும் பரவாயில்லை. என்றை வேணியை என்னட்டைத் திருப்பித் தா ஆண்டாவா. அவன் மனம் அவனுக்குள்ளேயே வெந்தணலாய்க் கொதித்தது.

வேணியை இன்னும் இரண்டு பெண்கள் சேர்ந்து ஒருவாறு பிடித்து வைத்திருந்தனர். குழந்தை பிறக்கப் போகுது போல கிடக்கு. அந்த "பெட்சீற்றை" கொண்டு வந்து ஒரு மறைவு கட்டுங்கோ. பக்கத்து வீட்டு ஆச்சியின் உத்தரவைத் தொடர்ந்து மேலும் இரண்டு பெண்கள் இரு "பெட்சீற்களை" ஒன்றாக முடிந்து விட்டு வேணியைச் சுற்றி மறைத்துப் பிடித்தனர்.

அவள் இப்போது பிடித்திருந்த நால்வரையும் மீறி கால் கைகளை அசைத்துக் கத்தினாள். ஐயோ அம்மா என்பதைத் தவிர வேறு வார்த்தை வரவில்லை. பக்கத்து வீட்டு ஆச்சிக்குப் பயம் எடுக்கத் தொடங்கி விட்டது.

"ஒன்றுக்கும் பயப்பிடாதை மோனை" எல்லாம் சுகமாய் நடக்கும். ஆச்சி ஆறுதலுக்காக வார்த்தாகளை வாரி விட்டாலும் அடி மனதில் ஏதோ ஒரு பயம் நிழலாடிக் கொண்டுதான் இருந்தது.

குழந்தை வளம் மாறிப் பிறக்ப் போகிறது. அதுதான் இவ்வளவு வேதனை என்பதை புரிந்து கொண்ட ஆச்சி அவளுக்கு முடிந்தளவு வலியைக் குறைக்கும் வழிமுறைகளைச் செய்து கொண்டிருந்தாள். குழந்தை பிறக்கப் போவதற்கு அடையாளமாக வயிற்றிலே ஏற்பட்ட மாற்றத்தைக் கொண்டு புரிந்து கொண்ட ஆச்சி மற்றைய பெண்களை, கால்களைச் சற்றுக் கெட்டியாக்ப் பிடிக்கும்படி கூறினாள்.

ஆச்சி சந்தேகப் பட்டபடியே கால்கள் முதலில் வெளியே வந்தன. பின் எந்த மாற்றமும் இல்லாதிருந்தது. வேணியோ வாய்விட்டு அலறிக் கொண்டிருந்தாள். நல்லா முக்கி.......... பெண்களுக்குரிய அந்தப் பாசையில் அவளை வற்புறுத்தினாள் பக்கத்து வீட்டுப் பாட்டி . குழந்தையின் கால்கள் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே வந்தன. ஆ........ அம்மா கூக்குரல் போட்டுக் கத்தவும் குழந்தை வெளியே வரவும் கணக்காய் அமைந்தது. பாட்டி புன்னகையுடன் சத்தமிட்டு சொன்னாள். மோகன் பாட்டியின் குரல் கேட்டதும் ஓடிப் போய்க் குழந்தையைப் பார்த்தான். என்ன பரிதாபம்! வேணி மயங்கிப் போய்க்கிடந்தாள்.

பாட்டி.... வேணியைப் பாருங்கோ........ என்ரைவேணியைப் பாருங்கோ பாட்டி......... அவளுக்கு என்னாச்சு. ஐயோ....... மோகனின் குரல் கேட்டு வேணியைத் திரும்பி நோக்கினாள் பக்கத்து வீட்டுப் பாட்டி. அவள் கால்களை விரித்த நிலையில் இரத்தம் பீறிட்டு ஓட மூச்சற்றுக் கிடந்தாள் . பாட்டி மெல்ல அருகிலே சென்று அவளது கையைத் தூக்கி நாடி பிடித்துப் பார்த்தாள். மறுநிமிடம்......

என்ரை ராசாத்தி.......... என்னை விட்டுப் போய்ட்டியோ மோனை........ பாட்டி வெடிகுண்டுகளின் ஒலியை விடப் பலமான குரலில் வீறிட்டு அழுதாள். மோகன்உகு அவனை நம்ப முடியவில்லை.உயிரைக் காக்க வெட்டிய பங்கருக்குள்ளேயே இன்னொரு உயிரின் உதிப்பு. அதே பங்கருக்குள்ளேயே இன்னொரு உயிரின் முடிவு.

மோகன் விம்மி விம்மி அழுதான். சிலர் வேணியின் ஆடையை ஒழுங்கு செய்து விட்டு அவளது கால்ப் பெருவிரல் இரண்டையும் சேர்த்து ஒன்றாகக் கட்டும் போது எங்கோ ஒரு கோணத்தில் உயிருடன் இருந்த சேவல் விடிந்து விட்டது என்று கூறுவது போல சிறகுகளை அடித்து கூவியது.

விமானங்கள் முடிந்தளவு அப்பகுதியை அழித்து விட்டு முகாமிற்குப் போய்விட்டன. சனங்கள் வேணியின் உடலைச் சுமந்த வண்ணம் வெளியே வந்தார்கள். அந்த ஊரிலிருந்த தொண்ணூறு வீதமான வீடுகள் தரைமட்டமாய்ப் போய்க் கிடந்தன. ஆனால் மோகனின் வீடு மட்டும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் அவளின் மரணத்தை வரவேற்பது போலக் காட்சியளித்தது.

மோகன் அழுது கொண்டு வர அவனைத் தொடர்ந்து பிள்ளையைப் ஆச்சி தூக்கி வர வேணியின் பூதவுடலை கைத்தாங்கலாக நான்கு பேர் தூக்கிக் கொண்டு வந்தார்கள். ஆண்டவனே!....... என் மனையை எடுத்துக் கொண்டு என் மனைவியை என்னிடம் கொடுத்திருக்கலாமே. ஏண்டா என்னை இப்படிக் கொடுமைப் படுத்தினாய்.என் வேணியை ஏனடா என்னிடமிருந்து பிரித்தாய் எனச் சொல்வது போயல அவன் முகம் சோர்ந்து போய் இருக்க கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே போனான் மோகன். அங்கே முன் மண்டபத்திலே அவள் சிரித்துக் கொண்டிருப்பது போல பிறேம் பண்ணிய ஒரு படம் நிலத்திலே விழுந்து நொருங்கிப் போய்க் கிடந்தது.

( யாவும் கற்பனை)

■

# சட்டம் வைத்தியருக்கு கொல்லும் அதிகாரம் கொடுக்கலாமா?

ஜோன்

"சட்டம்" இது சமுதாயத்தில் ஒழுங்கையும் சமாதானத்தையும் ஏற்படுத்தவென ஆக்கப்பட்ட ஒன்று என்பது யாரும் அறிந்தது தான். "வைத்தியம்" மக்களைப் பாதுகாக்கவென இயங்கிக் கொண்டிருக்கும் சேவை மனப்பான்மை கொண்ட ஒரு ஸ்தாபனம். வைத்தியத் துறையினுள்ளே சட்டம் எந்தளவுக்கு ஆதிக்கம் செலுத்துகிறது என்பது ஓர் ஆராயப்பட வேண்டிய விடயம். சில பிரச்சனைகளை வைத்திய நிபுணர்கள் ஒரு கோணத்திலும், சட்டம் வேறொரு கோணத்திலும், சமய நம்பிக்கை உள்ள ஸ்தாபனங்கள் மாறுபட்ட நோக்கிலும் பார்க்கத் தவறுவதில்லை.

வைத்தியர்களுக்கு சில கடும் நோயாளிகளை; அதாவது சாகும் வரை அவஸ்த்தைப் படுகின்ற சுய உணர்வில்லாத நோயாளிகளைக் கொல்ல

அதிகாரம் கொடுக்கலாமா? (இதை ஆங்கிலத்தில் MERCY KILLING என்பார்கள்) என் பதே இக்கட்டுரையின் முடிவாகும். எத்தனை குழந்தைகள் ஊனமாகப் பிறக்கிறார்கள். பலர் மிகக் கொடுமையான விபத்துக்களில்

மாட்டிச் சாகும் வரை சுய உணர்வில்லாமல் உயிர் வாழ்கிறார்கள். இவர்கள் விரும்பிக் கேட்டால்க் கூட இவர்களைக் கொல்ல சட்டம் முன் வருமா? ஏன் வரக்கூடாது?

இதை வாசித்ததுமே பலர் சத்தம் போட்டு எனக்குத் திட்டுவது என் செவிகளுக்கு கேட்கிறது. என்னடா கொலைக் குற்றவாளி என்று நீதி மன்றத்தால் நிரூபிக்கப்பட்ட ஒருவனையே தூக்கில் இடாதீர்கள் என்று சொல்லுகின்ற இக்கால கட்டத்தில் எந்தக் குற்றமுமே செய்யாத இந்த அப்பாவிகளைக் கொல்லச் சொல்லி இவன் கேட்கிறானே என்று!

இந்நோயாளிகள் படும் அவஸ்த்தையைக் கண்டு மனவேதனைப் படத்தான் ஒரு வைத்தியரால் முடியும். அதற்குப் பரிகாரங்கள் எல்லாம் சட்டமாக்கும் பாராளுமன்றத்தின் கையில்த்தானே உண்டு. ஒரு வைத்தியன் தன்னால் முடிந்தவரை ஒரு நோயாளியின் உயிரைக் காப்பாற்றப் படாத பாடுபடுகிறான் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. இருந்தாலும் குறிப்பிட்ட சில நோய்களையும், கடும் விபத்துக்களால் ஏற்படுகின்ற எதிர்பாராத விளைவுகளிலிருந்தும் நோயாளியைப் பழைய சுயநிலைமைக்கு கொண்டுவர முடியாதென வைத்திய நிபுணர்கள் தகுந்த சாட்சியங்களோடு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். இதன் விளைவாக அந்நோயாளி காலம் பூராக படுத்த படுக்கையில் உணர்வில்லாத ஓர் நடைப்பிணமாக மூச்சு நிற்கும் வரை போராடுகிறான். இல்லை வருந்தித் தாங்கொணாத் துயரில் வேதனைப்படுகிறான். இது ஒரு புறம் இருக்க எத்தனையோ குழந்தைகள் ஊனமாகவே பிறக்கப் போகின்றன என அது தாயின் கருப்பையில் இருக்கும் போதே வைத்தியர்கள் திடமாகக் கூறிவிடுகிறார்கள். இப்படிப் பிறந்த குழந்தைகள் காலம் பூராக நடக்க, பேச, உணர முடியாமல் அழுந்தி இறக்கிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமைகளில் மனித உயிர்களைக் கண் முன்னமே வருந்தி வாழ வைப்பது மற்றையவர்கள் என்னதான் இன்பம் காணுகிறார்களோ நான் அறியேன். இவர்கள் கண் முன்னமே வருந்தப் பெற்றோரும், சகோதரங்களும் நினைத்து நினைத்து அழுது கொண்டே இருக்கிறார்கள். நிம்மதியை இழக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் சட்டமானது சமூகத்திற்கு எந்தளவிற்குப் பங்களிப்புச் செய்யலாம் என்பது கேள்வியாகவே இருக்கிறது. ஒருவன் பிறக்கும் போதே தனக்குரியதான அடிப்படை உரிமைகளைச் சுமந்து கொண்டுதான் இந்த மண்ணில்ப் பிறக்கிறான். இதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. இந்த உரிமையை இன்னுமொருவனுக்குப் பறிக்கும் அதிகாரம் உண்டு

என்று சட்டம் எப்போதும் ஏற்றுக்கொண்டதே இல்லை. இப்படியான சூழ்நிலையில் ஒருவரின் உயிரை மற்றவர் பறிப்பதை எப்படிச் சட்டம் ஏற்றுக்கொள்ளமுடியும்? வேலியே பயிரை மேய லாமா? என்பது ஒருசாராரின் விவாதம். அதனால்; சட்டம் புனிதமானது என்பதை நிரூபித்துக் காட்ட வேண்டும் என்பதற்காக இந்த நோயா ளிகள்

கணம்தோறும் வருந்தி வாழவேண்டுமென்று சொல்வது எந்தளவுக்கு நியாயமானது என்பது கேள்விக்குறியே. நீங்களே

யோசித்துப் பாருங்கள். உங்களுக்கு இந்த நிலமை வந்தால் நீங்கள் இப்படி வாழவி ரும்புவீர்களா? அல்லது உங்கள் கண்முன்னமே உங்கள் குழந்தையொன்று வருந்துவதை நீங்கள் தாங்கிக் கொண்டிருப்பீர்களா? இந்த நோயா ளிகளால் இவ்வுலகில் வாழவும் முடியாது, உங் களால் இவர்களைக் கொல்லவும் வழி செய்ய முடியாதென்றால் இதற்கு என்னமுடிவு சொல்லு கிறீர்கள்?

மக்களைக் காப்பாற்றுவதற்கென்று மக்களால் ஆக்கப்பட்ட சட்டம் மக்களைக் கொல்ல முயல்வது ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு விவாதமாக இருக்கலாம். ஆனால் இவர்களைப் பொறுத்தவரையில் இது சரியென்று உங்களுக்குத் தென்படவில்லையா?

இது இப்படியிருக்க இன்னுமொரு பிரச்சனை ஆராயப்பட வேண்டித்தான் இருக்கிறது. இந்நோ யாளிகளைக் கொல்லும் அதிகாரத்தை சட்டம் வைத்தியர்களுக்கு வழங்கி விட்டால் இவ்வதி காரத்தை வைத்தியர்கள் துஸ்பிரயோகம் செய்ய மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு? சில சந்தர்ப்பங்களில் வைத்தியர்கள் நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றுவதில் அதிகம் அக்கறை காட்டாமல் போய்விடுமே என்றொரு ஐயம் எழுகிறது. வேலைப்பாடு கூடி அலுத்துப் போய் நிற்கின்ற வைத்தியர் உயிரைக் கொல்லுவதில் அல்லவா அதிகம் அக்கறை காட்டப் போகிறார்கள் என்றும் சிலர் வாதாட முன்வரக் கூடும். இது ஒரு புறமிருக்க; சட்டம் பூரண அதிகாரம் கொடுத்தாலும் கூட நான் கொல்ல மாட்டேன் என்று சொல்லுகின்ற சமய நம்பிக்கை கொண்ட எத்தனையோ வைத்திய ர்களையும் நாங்கள் பார்க்கக் கூடியதாக இரு க்கிறது.

இதைவிட வேறுமொரு பிரச்சனையும் இரு க்கிறது. "எப்படியான நோயாளிகளைக்" கொல்வ தென்று முடிவெடுப்பது மிகச் சிக்கலான பிரச் சனைதான். அதே நேரத்தில் உயிர் பிழைக்க மாட்டான் என்று வைத்தியர்களால் கைவிட ப்பட்ட எத்தனையோ நோயாளிகள் இன்று எழும்பி நடக்கிறார்களே இவர்களுக்கு என்ன சொல்வது? வைத்தியனும் ஒரு சாதாரண மனிதன் தான். அப்படிப்பட்ட ஒருவரால் ஒரு நோயா ளியின் நிலைமை பற்றி நூறு வீதம் திடமான கருத்தை எப்படிக் கூற முடியும்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் சட்டம் திருப் தியான பதில் கூறுமா? சட்டம் தன் விருப்பப்படி முடிவெடுக்கச் சமயம் விடுமா?

இப்படியான மக்களுக்குச்சேவை செய்ய எத்த னையோ சமய ஸ்தாபனங்கள் தானாகவே முன் வருகின்றன என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. இந்தசேவை , சேவை செய்பவர்களுக் கல்லவா சேவையாகத் தெரிகிறது. உணர்வே இல்லாத அந்த நோயாளிக்கு இது என்ன புரியப் போகிறது?

இப்படி ஒரு சட்டம் கொண்டு வருவது பற்றி ஒரு ஊனக் குழந்தையின் தாயிடம் கருத்துக் கேட்டால் அவள் என்ன சொல்லுவாள்? எனக்கு என் பிள்ளையை எப்படிப் பராமரிப்பது என்று தெரியும் நீ உன் வேலையைப் பாரப்பா என்று ஏசமாட்டாளா? அதே தாய் இந்தக் குழந்தை தன் சாவுக்குப் பின் எப்படிப் பராமரிக்கப்படப் போகிறது, யார்தான் இதைச் செய்வார்கள் என் பதில் எந்தத் தெளிவுமே இல்லாமல்த் தானே வாழுகிறாள்.

எது எப்படி இருந்தாலும் சட்டம் வைத்தியர்களுக்கு இவ்வதிகாரத்தைக் கொடுப் பதாக இருந்தால் யாரேனும் நெருங்கிய இரத்த உறவாளி ஒருவரின் அனுமதியுடன் தான் வைத்தியருக்குக் கொல்லும் அதிகாரம் வழங்கப் பட வேண்டும் என்பது யாருமே ஏற்றுக் கொள் ளக் கூடிய ஒரு விவாதம்.


— அடுத்த இதழில் தொடரும்


**With Compliments**

**T. Thiyagalingham**
**18, Nightingale Lane,**
**London SW12 8TB.**
**Tel: 081-675 1415**

**Contact for all your needs in Insurance, Mortgage and Travel Requirements**

www.padippakam.com

# நீ விட்டுப்போன பாதையில் நாம் பட்டுப் போன மரங்களா?

மார்கழி பதினோராம் திகதி. எங்களுக்கு இந்த திகதி வேண்டுமானால் வெறும் பதினோராம் திகதியாகவே இருந்து விடலாம். ஆனால்..... இந்தியாவில் இதற்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. ஆம். சுதந்திரத்தின் சுடரில் ஒளி பரப்பிய ஓர் ஆத்மா இந்தியாவில் உதயமான நாள். மகாகவி சுப்பிரமணிய பாரதி. 1921ம் ஆண்டு புரட்டாதி மாதம் பன்னிரண்டாம் திகதி அதிகாலை 1.30 மணிக்கு அந்த ஜீவன் இந்த உலகை விட்டுப் போனது. அங்கே அவனது உடலும் உயிரும் வேண்டுமானால் போயிருக்கலாம். அவன் விட்டுச் சென்ற பாதை இருக்கிறது. அவன் பாடிச் சென்ற பாட்டு இருக்கிறது. மார்கழி மாதம் 11ம் திகதி இற்றைக்கு நூற்றியேழு ஆண்டுகளுக்கு முன் பிறந்த பாரதியின் பிறந்த நாள். இந்த நாளை நினைவு கூரும் வேளை அவன் விடுதலை என்றால் என்ன? சுதந்திரம் என்றால் என்ன? என்று கூறிவிட்டுப் போனதை நினைவு கூரல் நன்றென நினைக்கின்றோம்.

ஒரு இனத்தின் விடுதலை அந்த இனத்தை ஆக்கிரமித்திருக்கும் சக்திகளை உடைத்தெறிந்து விடுவதன் மூலம் கிடைத்துவிடுமா? இல்லை. எம் சமுதாயத்தினுள் கட்டுண்டு கிடக்கும் ஆயிரம் ஆயிரம் பிரச்சனைகளுக்கும் விடிவு வரவேண்டும். அப்போது தான் உண்மையான விடுதலை வரும். இதை உணர்ந்து தான் பாடினான்,

ஜாதி மதங்களைப் பாரோம்- உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்
வேதியராயினும் ஒன்றே - அன்றி
வேறு குலத்தினராயினும் ஒன்றே - என்று.

எமது சமுதாயத்தில் வேரூன்றிப் போய்விட்ட சாதிப்பிரச்சனை ஒழிய வேண்டும். இது எமது சமுதாயத்திற்கு முட்டுக்கட்டையான விடயம். இதை உணர்த்தும் வேளை

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி - எனில்
அன்னியர் வந்து புகல் என்ன நீதி?

என்று எடுத்துக் கூறினான் பாரதி.

எமது தேசத்தினுடைய விடுதலை அங்கே ஏற்றத் தாழ்வு அற்ற ஒரு நிலையைக் கொண்டு வர வேண்டும். வருமானப் பங்கீடு, ஏழை பணக்காரன் என்ற வித்தியாச அமைப்பை மாற்றி அமைப்பதாக இருக்க வேண்டும். இதனை உணர்த்தியே அன்று சொன்னான்.

"இனியொரு விதி செய்வோம்- அதை எந்த நாளும் காப்போம். தனி ஒருவனுக்கு உண வில்லையெனில் ...." என்று.

சுதந்திரம் என்றால் என்ன? எந்த ஒரு உயிரும் இந்த இயற்கையுடன் நடாத்துகின்ற போராட்டத்தின் போது தம்மை ஒரு சக்தி கட்டுப்படுத்துவதாயும் அதனின்று தாம் விடுபட்டு நிற்கும் ஒரு நிலையே "சுதந்திரம்"என்றும் கொள்ளப்படுகிறது. ஒரு உயிரை இன்னொரு உயிரோ அன்றி இயற்கையோ கட்டுப்படுத்தலாம். அந்தக் கட்டுப்பாடு உடைக்கப்பட்டு அதனில் இருந்து விடுதலை கிடைக்கும். அந்த விடுதலை, அது விரும்பியதை அனுபவிக்க வழிகோலும். இங்கே சுதந்திரம் என்று கூறிட வந்த பாரதி,

"விண்ணி லிரவிதனை விற்றுவிட் டெவரும் போய்
மின்மினி கொள்வாரோ
கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின்
கை கூட்டிப் பிழைப்பாரோ" என்று உரைக்கிறான்.

மேலும்,

இதந் தரு மனையின் நீங்கி
இடர் மிகு சிறைப் பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற்றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழித்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே.

படிப்பகம்

இவ்வாறு அடிமையை சமுதாயத்தின் ஒவ்வொரு மூலையிலும் இருந்து உடைக்க எண்ணிய அவன் எமது சமுதாயத்தில் புரையோடிப் போன 'பெண்ணடிமை' நாகரீகத்தையும் கண்டிக்கத் தவறவில்லை. அதனையிட்டுக் கூறுகையில்,

"மாதர் தமை இழிவு செய்யும்
மடமையைக் கொழுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையிலும் நமக்குள்ளே
நாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமான மாக
வாழ்வதும் இந்த நாட்டிலே ......"

இப்படியே மனிதனுடைய விடுதலை என்பது அவனுக்கு எதிரான பிரதான எதிரியை முறியடிப்பதில் மட்டுமல்ல அவனுக்குள்ளேயே மறைந்து நின்று அவனது ஒவ்வொரு முயற்சியையும் குழி தோண்டிப் புதைக்கும் சக எதிரிகளையும் வென்றெடுப்பதிலே தான் எமது முழு 'விடுதலை'

தங்கியிருக்கிறது என்று பாடம் சொல்லித் தந்துவிட்டுப் போன பாரதியே உன் ஆத்ம சாந்திக்காக நாம் மௌனிக்கிறோம். ஆனால் நீ விட்டுப் போன பாதையில் நாம் பட்டுப் போன மரங்களா? கேள்விக் குறியுடனே நாளையை நோக்கி நகர்கிறோம்.

'புவனதாசன்'

# எமன் அனுப்பினான் என்னை... கூட்டிவா என ஜே. ஆரை.

"ஈழவிழி"

தூதுவன்: இதோ பிரபே! அவனை நான் கட்டி இழுத்து வந்திருக்கிறேன்.
எமன்: நன்று. அவனை என் அரண்மனைக்குக் கூட்டி வா. நான் சில கேள்விகள் கேட்க வேண்டும்.
தூதுவன்: ஆகட்டும் பிரபே!
(அகதியைச் சாட்டிக் காசு வாங்கியவனைப் பார்த்து ) டேய் எழும்பி வாடா! உன்னிடம் சில விளக்கங்களை அறிய வேண்டுமாம் மகாபிரபு.
(எமனின் அரண்மனையை நோக்கி அவனை இழுத்துச் செல்கிறான் தூதுவன்)
எமன்: டேய் நீ அகதிகளுக்கு என்று காசு சேர்த்து கடை வாங்கினாயாமே! உண்மையா?
அவன்: ஆம் பிரபே. உண்மை தான். ஆனால் என்னைப் போல் பலபேர்கள் அப்படி பணம் திரட்டும் போது எனக்கு மட்டும் ஏன் இந்தத் தண்டனை?
எமன்: அவர்களையும் கூட்டி வர ஆள் அனுப்பப் போகிறேன்.பயப்படாதே.
அவன்: நன்றி பிரபே!
எமன்: தமிழன் என்பதைக் காட்டி விட்டாயே.
தூதுவன்: பிரபே! எண்ணை நன்றாகக் கொதித்து விட்டது. என்ன செய்யலாம்?
எமன்: இவனைத் தூக்கிச் சென்று ஆடையைக் களைந்து விட்டு எண்ணெய்க் கிடாரத்தினுள் போடு.
தூதுவன்: அப்படியே ஆகட்டும் பிரபு!
அவன்: ஐயா! என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். தெரியாமல் பணம் திரட்டி விட்டேன்.
எமன்: அவன் பேச்சைக் கேட்காதே! அவனை எண்ணெய்ச் சட்டியினுள் போட்டு எடு. நான் அவசர அலுவலாய் பிரித்தானியா செல்ல வேண்டும். அங்கே அரசியல் கோளாறு நடைபெறுகிறதாம். நிலமையைக் கண்டறிந்து வருகிறேன்.
அவன்: அங்கு போவதானால் என் மனைவிக்கு ஒரு சேதி சொல்ல முடியுமா?
எமன்: அப்படி என்ன செய்தி நான் எடுத்துச் செல்ல வேண்டும்.
அவன்: நான் அகதிக்காக சேர்த்த பணம் அரைவாசிக்கு மேல் 'ஹலிபக்ஸ்' (Hallfax) வங்கியிலே சேமிப்புக் கணக்கில் போட்டு வைத்துள்ளேன். இந்த விடயம் என் மனைவிக்குத் தெரியாது. அவள் பணம் எடுப்பதானால் Presonal no (தனிப்பட்ட இலக்கம்) தேவை. அதனைத் தருகிறேன். அதை என் மனைவியிடம் சொல்ல வேண்டும்.
எமன்: .....................

(மீண்டும் தொடரும்)

# தங்காலைச் சிறையுடைப்பு

'பாலன்'

1) உணவு உடை என்பன ஒழுங்காக ஒப்படை.

2) வெளியுலகுடன் தொடர்பு கொள்ளக்கூடிய மாதிரி வெகு சனத் தொடர்பு சாதனங்கள் வழங்கு.

3) வருடக் கணக்காய் அடைபட்டிருக்கும் எம்மை விடுதலை செய் அல்லது விசாரணை செய்.

4) பெற்றோர் உறவினர் பார்வையிடக் கூடிய மாதிரி எம்மை தமிழ் இடங்களில் உள்ள சிறைக்கு மாற்று.

எல்லோரும் ஒத்துக் கொள்கிறார்கள். உண்ணாவிரதம் மறுநாள்க் காலையில் இருந்து ஆரம்பிக்கிறது. செய்திகள் தமிழ் பேசும் மக்களிடம் காட்டுத் தீ போல பரவுகின்றது. எங்கு பார்த்தாலும் ஒரே உண்ணாவிரதக் கதை. 39 பேர்கள் ஒவ்வொன்றாக மயங்குவதும் அவர்கள் பின் கைவிடுவதுமாக இருந்த போதும் 8பேர் உறுதியுடன் உண்ணாவிரதத்தை தொடர்கிறார்கள். (தண்ணீர் கூட அருந்தாது.) ஆறு நாட்களைக் கடக்கிறது.அரசு சற்று நடுக்கம் கொள்கிறது. ஏழாம் நாள் காலை சிறை மேலதிகாரிகள் வருகிறார்கள். 8 பேரும் எழும்ப முடியாத நிலையில் செல்களில் அடைக்கப் படுகிறார்கள்.

ஏன் வந்தார்கள்? அவர்கள் கைகளில் இருந்தது என்ன? உண்ணாவிரதம் வெற்றி கண்டதா?

அமைதியாக இருங்கள் . அங்கே தானே சிறை உடைப்புக்கான அத்திபாரமே இடப்படுகிறது. சொல்லாமல் விடுவேனா என்ன? சிறை நிர்வாகமும் பாதுகாப்பு அமைச்சும் (அவ்வேளை தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்தவன் லலித் அத்துலத் முதலி) கலந்து ஆலோசித்ததன் பின் உண்ணாவிரதத்தை நிறுத்தவே அவர்கள் வந்தார்கள். எப்படி நிறுத்துவது. ஆம். கோரிக்கைகளில் ஒன்றான வழக்குத்தாக்கல் செய் என்பதற்கிணங்க அவர்களில் இருவருக்கு வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தமைக்கான பிரதிகளுடனும் இரண்டாவது கோரிக்கையான உணவு உடை ஒழுங்கான இடம் என்பனவற்றை உறுதி செய்யும் சிறைச்சாலைகள் ஆணையாளரின் கடிதமும்தான் அவர்கள் கையில் இருந்தவை. உண்ணாவிரதம் வெற்றி கண்டதா? முழுக் கோரிக்கைகளும் வென்றெடுக்கப்படவில்லை ஆயினும் கிடைத்ததை வைத்துக் கொண்டு அங்கே உண்ணாவிரதத்தை கைவிடுவதென்ற முடிவு எடுக்கப்படுகிறது. ஏழாவது நாள் உண்ணாவிரதம் கைவிடப்படுகிறது.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கடிதத்தாள் வழங்கப்படுகிறது. அவர்கள் வீட்டுக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுத வேண்டும். தேவையான உடைகளைப் பார்சலில் பெற அனுமதி வழங்கப்பட்டது. இங்கே சிறையில் வேலை செய்த ஒரு தமிழ் பேசக்கூடிய அலுவலகர் ஒருவர் மூலம் ஓர் இரகசிய செய்தி மட்டுநகருக்கு அனுப்பப்பட்டாயிற்று அதாவது, இரும்புக்கம்பிகளை அறுக்கும் வாள் அனுப்பும்படி. எப்படி அனுப்பவேண்டும் என்றும் அக்கடிதத்தில் எழுதிவிட்டார்கள் (பாதுகாப்புக் காரணம் கருதி உதவிபுரிந்த அலுவலகர் இனம் மொழி பெயர் என்பன இங்கே தரப்படவில்லை).

எல்லோரும் கடிதம் எழுதி விட்டார்கள். பார்சல்கள் வரத்தொடங்கிவிட்டன. ஒருநாள்...

மட்டுநகரில் இருந்து ஒரு பார்சல் வந்தது (வருகின்ற பார்சல் எல்லாம் உடைத்து ஒவ்வொரு பொருளாக ஆராய்ந்து பார்த்துத்தான் கொடுப்பார்கள்). இந்தப் பொட்டலமும் பரிசோதிக்கப்படுகிறது. அதனுள்த்தான் வாளிருக்கிறது. உரியவர் அருகிலே நிற்கின்றான். அந்த இளைஞனின் நெஞ்சம் பட படவென அடிக்கின்றது. பிடிபட்டால் அவ்வளவுதான். மீண்டும் நாலாம் மாடி செல்லவேண்டும். அடிப்பார்கள். சித்திரவதை செய்வார்கள். ஆனால் எதையும் அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை.அந்த இளைஞன் பொட்டலத்தைக் கொண்டு அறைக்குப் போகிறான். எங்கே அந்த வாள்?

உதவி புரிந்த அலுவலகர் மூலம் அனுப்பப்பட்ட கடிதத்தில் எழுதிய ரகசியம் இதுதான்.

அன்பு நண்ப!

(குறிப்பு: கடிதம் சாராம்சத்தை வைத்து எழுதப்பட்டுள்ளது) இங்கே எம் நலம் எப்படியிருக்கும் என்று உனக்குப் புரியும் அல்லவா ஆகையினால் இதைப்பற்றி அலட்டிக் கொள்ளாது விடயத்திற்கு வருகின்றேன். நண்பா எமது விடுதலைப் போராட்டம் என்ன நிலையில் இருக்கின்றது? விடுதலைக்கு எம் வாழ்க்கையை இணைத்து விட்ட நாம் சிறைக் கம்பிகளைக் கண்டு அஞ்ச முடியாதல்லவா? ஆம்.தப்பியோட முயற்சி செய்கிறோம்.அதற்கு உனது முழு உதவியும் தேவை. வெகு விரைவில் நான் உனக்கு மடல் வரைவேன் . அதில் பாசல் கேட்டு எழுதுவேன். அப்படி எனது கடிதம் வந்தால் நீ அந்தப் பார்சலில் எனக்கு ஒரு வாள் அனுப்ப வேண்டும்.சிக்னல் பற்பசை இரண்டு வாங்கி ஒன்றின் பின் முனையைத் திறந்து வாளை இரண்டாக முறித்து பசையினுள்த் தள்ளி மீண்டும் பின்முனையை முன்போன்று மடித்து, வைக்கப்படும் சிக்னலில் ஒரு சின்னக் கீறிட்டு அனுப்பு. அத்துடன் ......(மீண்டும் பாதுகாப்புக் கருதி கடிதத்தின் பிற்பகுதி தரப்படவில்லை. )

இங்ஙனம்

உன் நண்பன்

அந்த இளைஞன் பார்சலைத் திறக்கிறான். அங்கே இரண்டு சிக்னல்கள் இருக்கின்றன.ஒன்றினுள் வாள்த் துண்டுகள் இரண்டு இருக்கின்றன. வாள்த் துண்டுகள் இரண்டும் கழுவப்பட்டு பத்திரப்படுத்தப்படுகிறது. எப்படித் தப்பியோடுகிறார்கள். எங்கள் பொறுமையை சோதிக்காதே.தயவு செய்து சொல்.ஆம் சொல்லாமல் விடுவதற்காகவா இவ்வளவு தூரம் வெந்தவேயிலில் உங்களை அழைத்து வந்தேன். மனிதனாய்ப் பிறந்து விட்டால்ப் பொறுமை வேண்டும். அந்தப் பொறுமை அவனைக் காப்பாற்றும்.

கண்டெடுக்கப்பட்ட வாள்த்துண்டுகள் இரண்டும் மற்றவர்களுக்குத் தெரியாத வண்ணம் மறைத்து வைக்கப்படுகிறது. அடுத்ததாய் என்ன நடந்தது? ஆம். வேறு ஒன்றுமல்ல. நீங்கள் பொறுமை இழந்து பொங்கிக் கொண்டிருக்கிறீர்களே அந்தச் சிறையுடைப்புக்கான முன்மாதிரித் திட்டம். இந்த வேலையில் ஈடுபடுவதற்கு தகுதியுடையவர்கள் என்று பதின் மூன்று பெயர்கள் தெரிவு செய்யப்படுகின்றன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பொறுப்பு இரகசியமாக வழங்கப்படுகிறது. அங்கே வழங்கப்பட்ட பொறுப்பு என்ன?

இதனை உங்களுக்கு நான் கூற முன்னர், ஒரு சிறிய சம்பவத்தை உங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். நீங்கள் அனைவரும் என்னை முறைத்துப் பார்க்காமல் பொறுமையுடன் கேளுங்கள். உண்ணாவிரதம் இருத்தல், அல்லது நிர்வாகத்துக்கு எதிராகப் போராடுதல் போன்ற சில விடயங்களை நாம் அனைவரும் கூடி ஆராய்வது வழமை. இப்படி ஆராயும் போது அந்த விடயம் நிர்வாகத்துக்கு மறுநாள் தெரிய வந்துவிடும். அதனால் அந்தத் திட்டம் செயலிழந்து போகவேண்டிய சூழ்நிலை எமக்கு ஏற்படும். எப்படி நாம் இரகசியமாய் போடும் திட்டம் அவர்கட்கு தெரியவந்தது? காக்கை வன்னியனின் பரம்பரையிலே வந்த ஆண்ட பரம்பரை தானே நாம் எல்லோரும். புரியவில்லையா? எங்களுக்குள்ளேயே கோரையும் இருந்தது? பூனை போல் பதுங்கி இருந்து தீர்மானிப்பது எல்லாவற்றையும் கேட்டுவிட்டு மறுநாள்ப் போய் சொல்லி விடுவான் அந்தப் பெரிய மனுசன். இப்படி முயற்சிகள் எடுப்பதும் அவை முளையிலே கிள்ளப்படுவதும் அனுபவ நிகழ்வாகிப் போன அவர்களுக்கு இத்தடவை, வலு இரகசியமாய் வேலையை முடிக்க வேண்டும் என்று தோன்றியதில் அர்த்தம் உண்டு தானே!

இதனை மையமாய் வைத்துக் கொண்டுதான் திட்டம் தீட்டப்படுகிறது. தப்பி ஓடுகின்ற அன்று தகவல் கொடுப்பவர்களுக்கு இந்த விடயம் தெரியாமல் இருக்க வேண்டும். எப்படித் தெரியாமல் செய்வது? ஒரே மண்டபத்தில்த் தானே அந்தக் கழுதைகளும் உள்ளன. அதற்கும் ஒரு வழி இருந்தது. ஆம். என்ன வழி? சொல்கிறேன்....

சிறையிலே இருந்த அனைவருக்கும் சமமாக ஒரு வியாதி வந்தது. அது என்ன வியாதி? புரியவில்லையா? அது வேறு ஒன்றுமில்லை. சொறி வியாதி. இதற்கு ஒரு வகை மாத்திரை வழங்கப்பட்டது. அதன் பெயர் 'பெனகன்' பல நிற வர்ணங்களில் காணப்படும் இந்த

மாத்திரையை எடுத்த அரைமணிநேரத்தினுள் தூக்கத்தைக் கொடுக்கும்.

இந்த மாத்திரைக்கும் சிறையுடைப்புக்கும் இடையில் ஒரு பிரிக்க முடியாத நட்பு இருக்கிறது. ஆம். தப்பியோடும் முயற்சியின் முதலாவது திட்டம் இதோ. தப்பியோட முயற்சிக்கிறோம் என்பது காட்டிக் கொடுக்கும் புல்லுருவிகளுக்கு தெரியவந்தால் சிறை நிர்வாகத்துக்கு காட்டிக் கொடுத்து விடுவார்கள். அப்படிக் காட்டிக் கொடுக்காமல் இருக்க ஒரு வழி இருப்பதாக அந்தப் பதின்மூன்று இளைஞர்களில் ஒருவன் கூறுகிறான். என்ன வழி அது? எல்லோரும் ஆவலுடன் கேட்கக் காத்திருக்கிறார்கள். அந்த இளைஞன் சொல்கிறான். நண்பர்களே! பார்சல்கள் வந்த போது எனக்கு வந்த பழரசம் (கோடியல்) ஒரு போத்தில் இருக்கிறதல்லவா. அந்தக் கோடியலை ஒரு பாத்திரத்தில்க் கரைப்போம். அதனுள் ஒருவருக்கும் தெரியாமல் நாம் "கடி" என்று சொல்லிச் சேர்த்து வைத்திருக்கும் "பெனகன்" மாத்திரைகளைக் கரைப்போம். தப்பியோடும் அன்று மாலை நான் எல்லோருக்கும் கூறுவேன்

"இன்று எனது காதலியின் பிறந்தநாள்" அவள் அனுப்பிய இந்தக் கோடியலை அருந்தி பிறந்த நாளைக் கொண்டாடுவோம், என்று. இதன் பின் நாம் அனைவரும் அந்தப் பானத்தை முதலில் அருந்த வேண்டும். குறுக்கிட்ட இன்னொரு இளைஞன்.... "அப்படியானால் நாங்களும் நித்திரையாகி......... சந்தேகம் வேண்டாம். கரைக்கும் போது மாத்திரைகளைப் போடாது எங்களுக்கு அளவாய் கொஞ்சம் கரைக்க வேண்டும். அதனையே நாம் அருந்துவோம். அப்படி அருந்தினால் மற்றவர்கள் சந்தேகம் இன்றி அருந்துவார்கள். சுமார் எட்டு மணி

அளவில் (இரவு) கொடுத்தோமானால் நாம் தப்பியோடும் நேரமளவில் அவர்கள் எல்லோரும் நித்திரையாகி விடுவார்கள். அந்த இளைஞனின் ஆலோசனை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அடுத்த திட்டம் பற்றிக் கூற இன்னொரு இளைஞன் தயாராகிறான்.

*(அடுத்த இதழில் தொடர்வோமா?)*

# கணப்பொழுது
# குறுக்கெழுத்துப் போட்டி

**போட்டி விதிகள்:**

**1)** ஒருவர் ஒரு விடை மாத்திரமே அனுப்பலாம்.
**2)** விடைகள் பங்குனி மாதம் 20ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
**3)** 14 வயதுக்குட்பட்டவர்கள் பங்கு பெற அனுமதியில்லை.
**4)** பரிசு பெறும் மூவருக்கு முறையே £25, £15, £10 பணத்துக்குரிய காசோலைகள் அனுப்பி வைக்கப்படும்.

**மேலிருந்து கீழ்**
**(எதிர்க்கருத்துள்ள சொற்கள்)**

1. தீவிரவாதி
6. குணவாளன்
7. நண்பகல்
13. சாலை
27. மந்தகதி
32. சிறைவாசம்
37. நல்கிணறு
41. ஆண்குறி
54. விழி

**இடமிருந்து வலம்**
**(ஒத்த கருத்துள்ள சொற்கள்)**

1. மிகுதி.
7. தெரிந்து கொள்
9. தானம்
13. ஊதாரி.
17. வெற்றிகொள்
31. திறப்பு
32. பாய்
39. குளம்
41. செல்வம் பெற்று வாழ்
44. வழமை
70. கொண்டை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 32 |
| 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 |
| 49 | 50 | 51 | 52 | 53 | 54 | 55 | 56 |
| 57 | 58 | 59 | 60 | 61 | 62 | 63 | 64 |
| 65 | 66 | 67 | 68 | 69 | 70 | 71 | 72 |

# கடந்தகால நிகழ்வுகள்! ஈழத்திலிருந்து வரும் செய்திக் கொத்து.

ஈழநிருபர் ஜோன்ஸ்

யாழ் நகரில் இலங்கை அரசின் அடாவடித்தனங்கள் மீண்டும் ஒரு முறை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. ஐப்பசி மாதம் 29ம், 30ம் திகதிகளில் ஆரம்பிக்கப்பட்ட இத்தாக்குதலானது மயிலிட்டி, கட்டுவன் பகுதிகள் வரை நீடித்ததோடு, மற்றும் பல பகுதிகளிலும் பலத்த சேதத்தை விளைவித்திருக்கிறது. அல்லைப்பிட்டி எனும் இடத்தை வந்தடைந்த இராணுவம், அப்பகுதியில் ஏற்பட்ட விடுதலைப் புலிகளுடனான சண்டையின் போது தென்னை, பனைமரங்கள், வீடுகள், வியாபார ஸ்தாபனங்கள் போன்றவற்றை முற்றாக அழித்ததோடு பாரதி வித்தியாலயத்தை தரைமட்டமாக்கியுள்ளது. இச் சண்டையின் போது கைது செய்யப்பட்ட 25 இளைஞர்கள் 45 நாட்களின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

யாழ் நகர அரச ஊழியரின் புரட்டாதி மாதச் சம்பளம் ஐப்பசி மாதம் முதலாம் திகதி யாழுக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அறியப்படுகிறது. தலைமன்னார்ப் பகுதிகளில் பல வீடுகள் இலங்கை காட்டுமிராண்டி இராணுவத்தினரால் கொள்ளையடிக்கப்பட்டு பின்னர் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

பலாலி, காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைப் பகுதி போன்றவை ஐப்பசி மாதம் முதலாம் திகதி தொடர்ச்சியான தாக்குதலுக்குள்ளானது. இத்தாக்குதலின் போது நூற்றுக் கணக்கான மக்கள் காயமுற்றனர். ஐந்து வயது நிரம்பிய ஒரு சிறுமி கொடூரமான நிலையில் கொல்லப்பட்டுள்ளார்.

வேலணைப் பகுதியை நெருங்கிய இந்திய மீன்பிடி வள்ளம் ஒன்று இலங்கை இராணுவத் தாக்குதலுக்கு உள்ளானது. இதில் பயணம் செய்த மீனவர்கள்அனைவரும் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

திருகோணமலையில் இலங்கை அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் முடுக்கிவிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாளங்குடாவுக்கும் குடியிருப்பு எனும் இடத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் வசித்த லிங்கம் 18, கந்தையா விக்னேஸ்வரன் 30, குமாரசாமி யோகன்22 ஆகியோர் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். மண்டைதீவில் ஏற்பட்ட கண்ணி வெடித் தாக்குதலின் போது மூன்று பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

கல்முனையில் உள்ள அட்டப்பாலம் தமிழ்ப் பாடசாலையின் அதிபர் திருமதி மங்கையர்க்கரசி இனம் தெரியாத நபர்களினால் கொலை செய்யப்பட்டுள்ளார்.

ஜெனீவாவில் விடுக்கப்பட்ட ஒரு செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கையில் 54 தமிழர்கள் அவர்களது உடற் பாகங்களை, கண்ணிவெடித் தாக்குதலின் போது இழந்து விட்டதாக அறிவிக்கின்றது.

பாசையூர்ப் பகுதி கடலில் வைத்து மரியதாஸ் ராஜ்குமார் 20 என்பவர் அரச துருப்புக்களினால் கைது செய்யப்பட்டுள்ளார் .(17-09-90)

ஐப்பசி மாதம் மூன்றாந் திகதி காலையில், சுண்ணாகம், மல்லாகம் போன்ற பகுதிகள் பயங்கர ஆகாய மார்க்கத் தாக்குதலுக்கு உள்ளானது. திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் தங்கள் சொத்துக்கள், உடமைகளைக் குறைந்த விலைக்கு விற்று விட்டு வேறு இடங்களுக்கு நகர்ந்து செல்கின்றனர்.

ஐப்பசி மாதம் காலை சுமார் பத்து மணியளவில் நடந்த கெலித் தாக்குதலின் போது காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலையின் ஒரு பகுதி பாரிய சேதத்திற்கு உள்ளாகியது. இதே தினத்தன்று நடைபெற்ற விமானக் குண்டு வீச்சுச் சம்பவத்தின் போது மயிலிட்டி, கட்டுவன் பகுதிகளில் மூன்றில் இரண்டு பகுதி வீடுகள், கடைகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் அரச தரப்பு குழுக்களின் அச்சுறுத்தலைத் தொடர்ந்து கிழக்கு மாகாணப் பல்கலைக்கழகம், கிரான் அஸ்ரம், முருகன் கோயில் ஆகிய இடங்களில்த் தஞ்சம் புகுந்த சுமார் 65000 தமிழ் பேசும் அகதிகள் அவ்விடங்களை விட்டு காடுகளுக்கு ஓடி விட்டதாக மட்டு நகர்ச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கை அரசு மேலும் 50,000 பேரை இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளும் திட்டத்தை

www.padippakam.com



வெளியிட்டுள்ளது. இதில் தமிழ் பேசும் மக்களுக்கு இடம் இல்லை என்பதும் தெரிய வருகிறது. இதே வேளை யாழ் நகரில் ஓய்வூதியம் பெறும் மக்கள் கடந்த நான்கு மாதங்களாக தமது தொகையைப் பெறவில்லை என்று அறியக்கிடக்கிறது.

ஐப்பசி ஆறாம் திகதி இந்தியாவுக்கு வள்ளத்தில் தப்பிச் சென்ற 27 அகதிகள் அரச படைகளினால் தாக்குதலுக்குள்ளானார்கள். அதில் பயணம் சென்ற 17 பெண்கள் உட்பட சில சிறுவர்களும் பலியானார்கள். மிகுதிப் பேர் தப்பியிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதே மாதம் 7ம் திகதி ஏற்பட்ட தாக்குலின் போது பலாலி, காங்கேசன் துறை முகாம்களிலிருந்து குரும்பசிட்டி, மாவிட்டபுரம், கீரிமலை, கொல்லன்கலட்டிப் பகுதிகள் சேதத்திற்குள்ளானது. அன்றைய தினம் யாழ் நகரில் உள்ள ஒரு பங்கருக்குள் இருந்து இரண்டரை அடி நீளம் உள்ள ஓர் "செல்" கண்டெடுக்கப்பட்டதாக தகவல்கள் கிடைக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தேத்தா தீவு எனும் இடத்தில் நான்கு தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஐப்பசி மாதம் ஏழாம் திகதியன்று, இந்தியாவுக்கு அகதிகளாக தப்பிச் சென்ற 78 தமிழர்களைக் கொண்ட வள்ளம் ஒன்று இலங்கைக் கூலிப்படைகளின் தாக்குதலினால் பாரிய இழப்புக்குள்ளானது. இதில்ப் பயணம் செய்த 67 பேர் அவ்விடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டனர். மிகுதிப் பேர் தப்பி விட்டதாக அறிகிறோம்.

கற்குடா,வாழைச்சேனைப் பகுதிகளில் கைது செய்யப்பட்ட 201 இளைஞர்களின் நிலை என்னவென்று தெரியாதுள்ளது. இவர்களின் உறவினர் இது தொடர்பாக பிரசைகள் குழுவினரை நாடியுள்ளனர்.

வடமராட்சியைச் சேர்ந்த செல்வநாயகம் பாலசுப்பிரமணியம் 45, புலோலி மேற்கைச் சேர்ந்த அவரது மாமா வேலாயுதம்60, செல்வராசா 45, காந்தியூர் உதயன்30, செங்கலடியைச் சேர்ந்த சின்ன வேலாயுதம் 59 ஆகியோர் அண்மையில்க் கொல்லப்பட்டுள்ளனர். ஐப்பசி மாதம் 9ம் திகதி சாவகச்சேரி சந்தையின் மேல் நடாத்தப்பட்ட தாக்குதலின் போது பின் வருவோர் கொல்லப்பட்டதாக அறிகிறோம்.

சின்னையா ஸ்கந்தராஜா40, திருமதி சின்னையா 36, சிறிரங்கன் 14, அவரது சகோதரன் பாஸ்கரன் 26, மட்டுவில் ஏ.கொங்கைவேந்தன் 29, பொன்னம்பலம் இலட்சுமணன் 12, சங்கத்தானை பஞ்சலிங்கம் 50, மிருசுவில் எஸ். முத்துப்பிள்ளை 60, மீசாலை பாலசிங்கம் மகேஸ்வரி 51, ஆறுமுகம் பசுபதி 50, மானிப்பாய் இராமகிருஸ்ணன் 27, சங்கத்தானை இராசலிங்கம் 46, மிருசுவில் துரையப்பா 55, சாவகச்சேரி, வல்வையில் மினிபஸ் மீது நடாத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சின் போது அதில் பயணம் செய்த கே.சிறிஸ்கந்தராஜா 43, எஸ். தர்மசந்திரன் 40 ஆகியோர் காயமுற்றனர். சரவணை மேற்கில் ஏற்பட்ட தாக்குதலில் பி. யோகாம்பிகை 38, பி.தயூஜா17, கே.வரலக்ஸ்மி 26 ஆகியோர் காயமுற்றனர்.

மடுவிலுள்ள அகதி முகாமை ஐ.நா சபையின் UNHCR பொறுப்பெடுத்துள்ளது. இம்முகாமில் 8,000 அகதிகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. கோட்டையை நோக்கி அரச குண்டு வீச்சு விமானம் Y12 நடாத்திய குண்டு வீச்சின் போது 19 வயதுடைய முத்துக்குமாரசுவாமி நாகேஸ்வரி காயமுற்றார்.

மட்டுநகர் கருவேப்பம் கேணியில் நடந்த குண்டுத் தாக்குதலின் போது 6 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அம்பாறையில் உள்ள திருக்கோவில்ப் பகுதியில், ஊர்காவற் படையினரால் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளதோடு ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

பதினாறிற்கும் மேற்பட்ட சிறுவர்கள் வாந்திபேதி நோயினால் உயிர் நீத்துள்ளனர். மேற்படி இச்சம்பவம் மடு அகதி முகாமில் ஏற்பட்டுள்ளது. பண்ணைப் பாலத்தில் வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி ஒன்று வெடித்ததினால் கந்தையா கணபதிப்பிள்ளை 60, மார்க்கண்டு நாகேந்ரன் 35, குமாரசாமி சத்தியசீலன் 40, கணேஸ் தம்பிராசா 35, தம்பு இராமச்சந்திரன் 40 ஆகியோர் படுகாயமடைந்தனர்.

வவுனியா நகரம் முழுவதும் இராணுவத்தினரால் பலத்த காவலுக்குள்ளாகியுள்ளது. இதன் காரணமாக, யாழிலிருந்து கொழும்புக்குச் செல்ல தப்பி வந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் வவுனியா அகதி முகாமில் தஞ்சம் அடைந்துள்ளனர். இளைஞர்களும், யுவதிகளும் வவுனியா இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இது இவ்விதம் இருக்க மண்டைதீவில் வைத்து கைது செய்யப்பட்ட 23 இளைஞர்களின் கதி என்னவென்று தெரியாதுள்ளது.

10-11-90 அன்று நடந்த தாக்குதலில் மண்கும்பானைச் சேர்ந்த மகாலக்ஸ்மி 38 காயமடைந்துள்ளார். 12ம் திகதி இதே மாதம் ஏற்பட்ட ஒரு கண்ணிவெடித் தாக்குதலில் ஏழாலையைச் சேர்ந்த 15 வயது நிரம்பிய சிறுவன் சின்னத்துரை திருச்செல்வம் காயமடைந்துள்ளார். காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையின் மீது நடத்தப்பட்ட குண்டுவீச்சின் போது இணுவிலைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம் 55 (கணக்கியலாளர்) மரணித்துள்ளார். இதே தினத்தன்று மாலை நடைபெற்ற இன்னுமோர் தாக்குதலில் எஸ்.அப்பாத்துரை (கொல்லன்கலட்டி) என்பவரும் கொல்லப்பட்டுள்ளார்.

படிப்பகம்

சங்கானையில் இடம்பெற்ற கெலித் தாக்குதலில் (12-10-90) காரைநகரைச் சேர்ந்த ஆறுமுகம் நவரட்ணம் 45 கொல்லப்பட்டுள்ளார். இதே தினம் அராலி எனும் இடத்தில் நடந்த தாக்குதலின் போது ஏழுபேர் காயப்பட்டுள்ளதாக எமது விசேட அரசியல் நிருபரின் செய்திகள் அறியத் தருகின்றன. மண்டைதீவுக்கு தமது வீட்டினை பார்வையிடச் சென்ற வழியில் கண்ணிவெடியில்ச் சிக்குண்ட கிருஸ்ணபிள்ளை மோகனதாஸ் 14, வைரவநாதன் கிருஸ்ணபிள்ளை50, இராசநாயகி கிருஸ்ணபிள்ளை50 ஆகியோர் படுகாயத்திற்கு உள்ளாகினார்கள்.

சண்டை ஆரம்பித்ததிலிருந்து இன்றுவரை 3300 பேர் வரை கொல்லப்பட்டதாகவும், 17000 பேர் காயப்பட்டுள்ளதாகவும், 900 பேர் கைது செய்யப்பட்டோ அன்றி காணாமலோ போயுள்ளனர் என்று ஐ.நா சபையின் அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது.

இராசதுரை சுதர்சன் 14, வேலணை; காயமடைந்துள்ளார். இது 11-10-90 அன்று ஏற்பட்ட தாக்குதலின் போது நடந்தது நோக்கத்தக்கது. பளையில் நடந்த இன்னொரு தாக்குதல் சம்பவத்தின் போது நடேசபிள்ளை உதயகுமார் 26, கால்களை இழந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் இறந்துள்ளார். இவரது மகள் மேனகா 6 படுகாயமடைந்துள்ளார். அத்துடன் பரமேஸ்வரி பத்மசேரன் (பெயர் தெளிவாக இல்லை) 38 என்பவரும் காயமடைந்துள்ளார்.

மண்டைதீவு, அல்லைப்பிட்டியைச் சேர்ந்த சுமார் 71 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். நாகபட்டுவான் பூநகரிப் பகுதியைச் சேர்ந்த சில சிறுவர்கள் பசியின் நிமித்தம் தற்கொலை செய்துள்ளனர்.

14-10-90 அன்று நடந்த விமானப்படைக் குண்டு வீச்சின் போது திண்ணைவேலி, உடுப்பிட்டி பகுதிகள் சேதமடைந்தன. இத்தினத்தன்று எஸ்.ராஜேஸ்வரி 32 திண்ணைவேலி, சுப்பிரமணியம் 50 கந்தர்மடம், சைமன்சிங் 65 பிரவுண் ரோட் ஆகியோர் திண்ணைவேலிச் சந்தையில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஒரு சந்தர்ப்பத்தில் நடராசா குமாரதாஸ் 13 உடுப்பிட்டி, விநாயகமூர்த்தி மோகனராசா 15, தனபாலசிங்கம் தனராசா 7 தம்பட்டி ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் ஏழு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

13-10-90 அன்று காரைதீவில் 30 தமிழர்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். ●

"மேலதிக விபரங்களுக்கு வைகறையை எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும்"

# பக்தன்

ஒரு கிராமத்திலே ஒரு இனி இல்லை என்ற பக்தன் இருந்தான். அவனுக்கு கடவுளில் அபார நம்பிக்கை. ஒருநாள் திடீரென்று அந்த ஊரிலே வெள்ளம் ஏற்பட்டது. அவன் கடவுளை வேண்டிய படியே, உயிரைக் காப்பாற்றும் பொருட்டு தனது வீட்டுக் கூரையில் ஏறி நின்றான். வெள்ளமோ வரவர உயர்ந்து அவனது மார்பு வரை வந்து விட்டது. அந்நேரம் பார்த்து ஒரு வள்ளம் நாலு ஐந்து பேருடன் அவ்விடம் வந்தது. அந்த வள்ளம் ஓட்டி "ஏய் மனிதா! இந்த வள்ளத்தினுள் ஏறு நான் உன்னைக் காப்பாற்றுகிறேன்" என்றானாம். அதற்கு அந்த மனிதன் "எனக்கு ஆண்டவன் மேல் நல்ல நம்பிக்கை இருக்கிறது. உன் உதவி தேவையில்லை.அவன் என்னைக் காப்பாற்றுவான்" என்று கூறினானாம்.

சில நிமிடம் கழித்து அவனது மூக்குவரை வெள்ளம் உயர்ந்து விட்டது. அந் நேரம் மக்களைக் காப்பாற்றும் ஒரு 'கெலிக்கொப்டர்' வந்ததாம். அதிலிருந்த ஒரு படைவீரன் 'ஏய் மனிதா! இந்த ஏணியில் பிடித்து ஏறு உன்னைக் காப்பாற்ற வந்திருக்கிறோம்' என்றானாம். அதற்கு அவன் 'எனக்கு என் கடவுள் மீது நம்பிக்கை இருக்கிறது. உங்கள் உதவி எனக்கு தேவையில்லை. நீங்கள் போகலாம்.' என்று கூறினானாம்.

சில நிமிடங்களில் வெள்ளம் கூடி அவன் இறந்து விட்டான். அவனது ஆவி பரலோகம் சென்றது. அங்கே கடவுள் அமர்ந்திருப்பதைக் கண்ட அவனது ஆவி கோபம் கொண்டு 'ஆண்டவா! நான் உன் மேல் எவ்வளவு பக்தி வைத்திருந்தேன். அதைப் பொருட்படுத்தாது எல்லோர் முன்னேயும் என்னை அவமதித்து விட்டாயே. ஏன்?' என்று கேட்டானாம். அதற்கு ஆண்டவன் சொன்னாராம். 'மனிதா..... உன்மேல் இரக்கம் கொண்டு முதலில் வள்ளம் அனுப்பினேன். பின் 'கெலி' அனுப்பினேன். நீதான் எதிலுமே ஏறவில்லையே. என்னையேன் குற்றம் சாட்டுகிறாய் 'என்று. பக்தன்..............

(Readers Digest நூலிலிருந்தது - மொழிபெயர்க்கப்பட்டது) ●

www.padippakam.com



# Global Printers

164A, (Rear) Mitcham Road,
Tooting,
London SW17 9NJ.
Tel: 081-682 3890

We Undertake the following work at reasonable rates:

PRINTING - TAMIL & ENGLISH
Letter Heads, Business Cards,
Complement Slips, Invoices.
Wedding Cards, Invitation Cards.
Leaflets, Posters, Tickets.

TYPESETTING:

Outputs from 300dpi to 2450dpi
on Plain paper, Bromide & Film.
Negative or Positive outputs.

MAGAZINES & BOOKLETS

ARTWORK, & LOGO DESIGNING.

Typesetters - Graphics Designers - Printers

*Global Printers*

*For prompt service at reasonable rates*
*call us on 081-682 3890*

**OPEN MONDAY TO FRIDAY 9.30am TO 7.30pm**
**SATURDAY 1.00pm TO 5.00pm**
**SUNDAY 10.00am TO 11.00am**


படிப்பகம்

www.padippakam.com

# வழி கேட்ட கிளி


ஈழவனே!
என் அனல் கக்கும்
பெருமூச்சுக்களில்
வெறும் சூடு மட்டும் இருப்பதால்
விட்டு விடாதே!
ஆற்ற முடியாத என்
அவலங்களைச் சற்றுக்கேள்!

என் அடி மனக்கிணற்றுக்குள்ளிலிருந்து
அள்ளி இறைக்கப்படும்
கலங்கிப் போன வார்த்தைகளில்
அர்த்தம் இல்லாவிட்டால்
உன் சட்டமே என் வட்டமாய்
இருந்து விடுகிறேன்!



என் உணர்வுகளைக் கொலை செய்து
கம்பிகளுக்குள் கால வரையின்றி
காவலில் வைத்திருக்கிறாயே
என் வாழ்க்கையை நிர்ணயிக்கும் பொறுப்பு
உனக்கெப்படி வழங்கப்பட்டது?

என் அபிலாசைகள்
நீல வானத்தினூடே
நீந்த வேண்டுமென்ற என் இலட்சியங்கள்
அதற்காக நான் தீட்டிய திட்டங்கள்
தீர்வுகள், பாதைகள்
அத்தனையையும் வினாடிகளில் ஒடித்துவிட்டு
என்னை அடக்கி ஒடுக்கி வைத்திருக்கிறாயே
இது உனக்கு எப்படி ஞாயமாய்த் தெரிகிறது?



எனக்கு என்றொரு இனம்
மொழி, வழி......
இப்படிச் சண்டையோ பிரிவோ இல்லாமல்
இன்ப வானிலே சிறகடித்த என்னை
சிறை கொண்டாயே ஏன்?

அடிமைப்பட்டு, ஆதரவற்று
ஒடுக்கப்பட்டு ஒதுக்கப்படும் உனக்குமா
சுதந்திரத்தின் நிறம் புரியவில்லை?
உன்னால்க் கூடவா
அடிமை என்பதன் அர்த்தம்
விளங்கப்படவில்லை.

என் சிறகுகளை வெட்டி
உறவுகளைப் பிரித்து
இரவுகளில் ஏங்க வைத்த
மானிடா
என்னை விட்டு விடு
சுதந்திரக் காற்றை சுவாசிக்கத்
துடிக்கும் என் நாசிக்கு
ஒரு வழி காட்டு.

- புவனதாசன்

Typesetting & Printing by GLOBAL PRINTERS
164A (Rear) Mitcham Road, London SW17. Tel: 081-682 3890